மன்றம்

இரா. நெடுஞ்செழியன். எம். ஏ.

மலர் 15 - 6 - 55 இதழ் 4



★

ஆண்டியைக் காதலித்த அரசி

★

தனிப்படி அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

பரீட்சை சமயத்தில் காய்ச்சல்!

அறிஞர் அண்ணா அவர்கள் பொருளாதாரப் பகுதியில் சிறப்புப் பட்டம் (பி. ஏ. ஆனர்சு) பெற்று, பின் எம். ஏ. பட்டமும் பெற்றார். முதல்தடவைப் பல்கலைக் கழகப் பரிட்சைக்குச் சென்றபொழுது, அவர் தேறவில்லை. காரணம் இரண்டு தாள்கள் எழுதியதற்குப் பிறகு, அவர் மேற்கொண்டு பரிட்சைகளுக்குப் போகவில்லை, தன்னுடைய நண்பர் ஒருவருக்காகப் பரிந்துகொண்டு.

முதல் இரண்டுநாட்கள் நடந்த பரிட்சைகளில் அண்ணா அவர்கள் மிக நன்றாக எழுதியிருந்தார். ஆனால் அவருடைய நெருங்கிய நண்பர் ஒருவர், பரிட்சையில் மிகமோசமாக எழுதிவிட்டு, சோர்ந்த முகத்துடன், வெளியே வந்தார். தான் தோல்வியுறுவது நிச்சயம் என்றும், அதற்காக மேற்கொண்டு எழுதாமல் அந்த ஆண்டு நின்றுகொண்டு மறு ஆண்டு எழுதப்போவதாகவும் நண்பர் சொன்னார். ஏனென்றால் சிறப்புப் பட்டப்பரிட்சைக்கு ஒருவர் ஒருதடவைக்குமேல் முழுவதும் உட்காரக்கூடாது. வெற்றிபெற முடியாது என்று நினைப்பவர்கள் கடைசிப் பரிட்சைக்கு முன்னதாக நின்றுகொண்டதாக அறிவித்துவிட்டு, மறு ஆண்டு பரிட்சைக்கு உட்காருவார்கள். தனது நண்பன் நன்றாக எழுதாமல் நின்றுவிடப்போவதாக சொன்னதும், அவனிடம் இரக்கங்காட்டித் தோழமை காரணமாக, தானும் அத்துடன் நின்றுவிடப்போவதாக அண்ணா அவர்கள் அறிவித்தார்கள். அண்ணா அவர்கள் நன்றாகப் படித்து, முதலாவதாகத் தேர்ச்சிபெறும் வாய்ப்பைப் பெற்றிருந்தும், நின்றுவிட்டது மற்ற மாணவர்களுக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

நண்பனுக்காகப் பரிவுகாட்டி பரிட்சைக்குப் போகாமல் நின்றுவிட்டாலும், வீட்டிற்குப்போய் என்ன சொல்வதென்று அண்ணா அவர்களுக்குப் புரியவில்லை. இரு நண்பர்களும் கூடி யோசித்தனர். கடைசியாக காய்ச்சல் வந்துவிட்டதால் பரிட்சைக்குப் போகமுடியவில்லை என்று காரணங்காட்ட முடிவுசெய்தனர்.

காய்ச்சலை எப்படி வரவழைப்பது? மற்றவர்கள் கல்லூரிக்குப் போனதும், அண்ணாவும் அவரது நண்பரும் குளிக்கும் அறைக்குப் போய், தண்ணீர்க்குழாயைத் திருப்பிவிட்டு, கீழே உட்கார்ந்துவிடுவார்களாம், தினந்தோறும் இரண்டுமூன்று மணிநேரம் தொடர்ச்சியாக இப்படி உட்கார்ந்திருந்தால், காய்ச்சல் வந்துவிடும் என்று. ஒருவாரமாகியும், அவர்கள் எவ்வளவு முயன்றும், தண்ணீர்க்குழாயின்கீழ் தவமிருந்தும், காய்ச்சல் மட்டும் வரவில்லை. மாறாக, நன்றாகத் தண்ணீர்பட்டு, உடல் 'மினுமினு'வென்று பொலிவுடன் விளங்கியது!

பரிட்சைகள் முடிந்ததும் அண்ணா அவர்கள் வீட்டுக்குத் திரும்பாததுகண்டு, அவர்களுடைய சிற்றன்னை (தொத்தா) அவர்கள் கல்லூரி விடுதிக்கு வந்து, அண்ணாவைத் தேடிப்பிடித்து அழைத்துச் சென்றார்கள்.

மறு ஆண்டு, இரு நண்பர்களும் தேர்வில் வெற்றிபெற்றனர்.

முதல்தடவை அண்ணா அவர்கள் எழுதிய இரு பரிட்சைதாள்களையும் திருத்திய பேராசிரியர், அந்த நம்பர் மாணவனே பல்கலைக் கழகத்தில் முதலாவதாக வருவான் என்று சொல்லிக்கொண்டிருந்தாராம். மற்றப் பரிட்சைகளுக்கு மாணவன் போகவில்லை என்பது பிறகுதான் அவருக்குத் தெரியவந்ததாம்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

15 - 6 - 55 புதன்கிழமை

ஏன் இந்த ஆத்திரம்?

சென்னை அரசைச் சேர்ந்த தாழ்த்தப்பட் டோர் (அரிசன) இலாகாவினர், தீண்டாமை யைப் போக்கடிக்கும் முயற்சியிலே ஈடுபட்டுச் லபல பணிகளைச் செய்துவருகின்றனர். அப்படிப்பட்ட பணிகளிலே தீண்டாமை ற்றிய அறிவு விளக்கப படங்களைச் சுவ ராட்டிகளாகத் தயாரித்துப், பொது இடங் ளில், பொதுமக்கள் பார்வைக்குமுன் வைப் து என்பது ஒன்றாகும். அப்படி ஒட்டப்பட்ட வரொட்டிகளிலே ஒன்று, இப்பொழுது, ங்களின் ஆத்திரத்தை நக் கிளப்பிவிட்டிருப் தாகக் கூறிப் பல பார்ப்பனர்கள் பேச்சின் லமும், எழுத்தின் மூலமும் ஆர்ப்பரித்துவரு ன்றனர்.

பார்ப்பனக் கோலம் பூண்ட ஒருவர், தாழ்த் ப்பட்ட தோழர் ஒருவரை தொடாமல் எட் ப்போகும்படி அதட்டிக் கூறுவதுபோலவும், அப்படி அவர் தீண்டாமையைக் கடைப்பிடிப் தற்காக அவருக்கு சிறைத்தண்டனைக் காடுக்கப்பட்டிருப்பதுபோலவும் சுவரொட் ப் படத்தில் காட்டப்பட்டிருப்பதே பார்ப்பன ன் ஆத்திரத்திற்கு முக்கிய காரணமாம். டம் தங்கள் குலத்தைத் தனிப்பட்ட முறை ல் இழித்துக் கூறுகிறது என்றும், அது டாது என்றும் கூறி அபபார்ப்பனர்கள் ப்பொழுது ஆத்திரப்படுகின்றனர்.

படம் எப்படியிருக்கிறது என்பதை யல்ல, பருப்பகுதி பார்ப்பனரின் மனப்பான்மை ப்படியிருக்கிறது என்பதையே நாம், முக்கிய ாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். தீண் ாமை பற்றியும், பார்ப்பனர்கள் கையாளும் றைபற்றியும் படத்தில் காட்டப்பட்டுள்ள ன்மை உண்மைக்குப் புறம்பானது என்று ரும் கூறிவிடமுடியாது. "உள்ளதைச் சால்லப்போனால் நொள்ளைக்குக் கோபம்" ன்ற பழமொழிக்கிணங்க உண்மையைச் டிக்காட்டும்போது, அந்த உண்மைக்குக் ாணமாக இருக்கும் பார்ப்பனர்களுக்குச் சினம் தோன்றுகிறது. ப்டமே அவர்களுக்கு அளவுக்கு மீறிய ஆத்திரத்தை உண்டாக்கி யிருக்கிறது என்றால், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தீண்டாமைக்கு ஆளாக்கப் பட்டு அவதியுறும் தாழ்த்தப்பட்ட தோழர் களுக்கு எவ்வளவு ஆத்திரம் இருந்திருக்க வேண்டும் என்பதை ஏனோ பார்ப்பனர்கள் இதுகாறும் மறந்துவிட்டார்கள்? தம்மைப் படத்தில் இழிவு படுத்தும்போது தமக்கு ஏற்படும் ஆத்திரத்தைவிடப் பன்மடங்கு மிக வாக நடைமுறையில் இழிவுபடுத்தும்போது தாழ்த்தப்பட்ட தோழர்களுக்கும் ஏற்படும் என்பதைப் பார்ப்பனர்கள் ஏனோ இவ்வளவு காலமும் மறந்துவிட்டார்கள்? தீண்டாமையை விடாப்பிடியாகக் கட்டிக் காத்துவரும் சமூகம் பார்ப்பனர் குலம் என்பதை எந்தப் பார்ப்பன ரால்தான் மறுக்கமுடியும்?

படத்தில் பார்ப்பனரையும் பறையரையும் போட்டுக் காண்பிக்கப்பட்டிருக்கிறது என்றால், தீண்டாமையை வலியுறுத்தும் சமூகத்தின் உச்ச நிலையில் இருப்பவர்கள் பார்ப்பனர்கள்; தீண்டாமையால் பாதிக்கப்பட்டு அடித்தளத் தில் கிடப்பவர்கள் பறையர்கள். இடையிலே இரண்டு நிலைமைகளுக்கும் ஆளாவோர் பலப் பலர். எனவே தீண்டாமையை வற்புறுத்துவ தற்கு எடுத்துக்காட்டாக ஒரு பறையனையும் படம் காட்டுகின்றது என்பதில் தவறு என்ன இருக்கமுடியும்? தீண்டாமையைக் கடைப் பிடிப்பவர்க்குச் சிறைதண்டனை என்பதில் தான் என்ன தவறு இருக்கமுடியும்? பார்ப் பனரைத் தொட்ட குற்றத்திற்காக இறந்த காலங்களில் தரப்பட்ட தண்டனைகள் இதை விடக் கடுமையானவைகளாயிற்றே!

படம் கண்டு பார்ப்பனர்கள் ஆத்திரப்படு கிறார்கள் என்றால், அவர்கள் நிலைமையை மாற்றிக்கொள்ள விரும்பவில்லை, அதனைக் குற்றமென யாரும் சுட்டிக்காட்டக்கூடாது என்று விரும்புகிறார்கள் என்றுதானே பொருள்படும்! ஏன் இந்த ஆத்திரம்? என்று பார்ப்பனர்களைப் பார்த்து நாம் கேட்கிறோம்! நாடும் அரசும் கேட்கவேண்டும்? **ஆத்திரப் படாதே நிலைமையை மாற்று!** என்பதல்லவா அரசாங்கம் பார்ப்பனர்களைப் பார்த்துக் கூற வேண்டியதாக இருக்கவேண்டும்? ஆனால் இன்றைய அரசியலாரின் போக்கு, பார்ப்பன ரின் ஆத்திரத்துக்கு அடிபணிவதாக இருக் குமோ என்றுதான் ஐயுறவேண்டியிருக்கிறது! காரணம் அந்தச் சுவரொட்டிகளையெல்லாம், அரசியலார் மீட்சிபெறும்படி கட்டளை பிறப் பித்துள்ளார்களாம்! காலம் மாறுகிறது; ஆனால் பெரும்பாலான பார்ப்பனர்கள் மட்டும் மாற மறுக்கிறார்கள்! ஆனால் எதிர் காலம் அவர்களை மாற்றியே தீரும் என்பது மட்டும் உறுதி!

கருத்துக்கதிர்

திராவிடம் புறக்கணிக்கப்படுகிறது

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் திராவிடம் புறக்கணிக்கப்பட்டு வடநாடு வளமாக்கப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டி, நாடெங்கும் கண்டனக்குரல்கள் எழும்பும் வண்ணம் திராவிட முன்னேற்றக் கழகம் பணியாற்றி வருகிறது. வடநாடு, திராவிடம் என்ற வேற்றுமையுணர்ச்சி கூடாது என்று கண்டித்த காங்கிரசுகாரர்களே இன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் நடத்தப்படும் அக்கிரமங்களைக் கண்டிக்க முன்வந்திருக்கின்றனர். தி. மு. கழகம் எழுப்பிய கண்டனக்குரலுக்கு ஆதரவு தரும் வகையில், அண்மையில், சென்னை மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கான வழி வகைகளைக் கண்டறிந்துகூற சென்னை சர்க்காரால் நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் வெளியிட்ட கருத்து அமைந்துள்ளது.

"பெரிய தொழில்கள் சம்பந்தப்பட்ட வரையில் சென்னை ராஜ்யம் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. சுதந்திரம் அடைந்த பிறகும் சென்னை ராஜ்யம் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது" என்ற கருத்தை வெளியிட்ட அந்தக் குழுவினர் இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பும் சென்னை புறக்கணிக்கப்பட்டதாயும், சுதந்திரத்திற்குப் பின்பும் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை என்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். இதைப்போலவே கருநாடகப் பகுதியும் ஐந்தாண்டுத் திட்டத்தில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதை மைசூர் முதலமைச்சரே வெளியிட்டிருக்கிறார். திராவிடம் புறக்கணிக்கப்படுகிறது என்பதை இப்பொழுதுதான் உணருகின்றனர். அரசியல் பொருளாதார நிலைமைகளில் முன்னேற திராவிடம் இந்தியாவினின்றும் பிரியவேண்டும் என்பதை காங்கிரசுகாரர்கள் இனி உணர்வார்கள் என்று எண்ணலாம்.

ஃ ஃ ஃ

க்ஷயரோகத் தடுப்பும் ஆச்சாரியார் துடிப்பும்

அமைச்சர் பதவியை இழக்க நேரிட்டு, துறவுக்கோலம்பூண்டு பஜகோவிந்தம் பாடிக்கொண்டிருந்த தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சிறிது நாட்களாக அன்றாட உலக விவகாரங்களில் இறங்கி ஏதாவதொன்றைப்பற்றி, திடீர் அறிக்கைகள் விடுத்தவண்ணம் இருக்கிறார். பாண்டுங் மாநாட்டில் கொத்தலவாலா பேசியது பற்றி ஒரு அறிக்கையும், இந்திக் கட்டாயபாடமாகத் திணிப்பதை (1938-ல் அமைச்சர் ஆச்சாரியார் இந்தியைக் கட்டாயபாடமாகத் திணித்தார்) கண்டித்து ஒரு அறிக்கையும், இங்கிலாந்தில் கன்சர்வேடிவ் கட்சி தேர்தலில் வெற்றிபெற்றது குறித்து ஒரு அறிக்கையும்—இப்படி ஆச்சாரியாரின் அறிக்கைகள் பலதிறப்பட்டதாக அமைந்து ஆச்சாரியாரின் பெயரும் அன்றாடம் செய்தித்தாள்களில் அடிபட்டுக் கொண்டிருக்கிறது. தாம் அறியாத ஒன்றைப் பற்றி அவசரப்பட்டுத் தவறான முடிவை எடுப்பதில் ஆச்சாரியார் எப்போதுமே நிபுணராவார். அண்மையில் க்ஷயரோகத் தடுப்பு ஊசி குத்தும் இயக்கத்தைப்பற்றி ஆச்சாரியார் வெளியிட்ட அறிக்கை இதற்குச் சான்றாக இருக்கிறது. "என்னதான் பி. சி. ஜி. இயக்கத்தினர் சொன்னபோதிலும் இப்பொழுதுள்ள நிலைமையில் நம்நாட்டில் ஆரோக்கியமான குழந்தைகளுக்கு மொத்தமாக பி. சி. ஜி. ஊசிபோடுவது பத்திரமானதல்ல என்பது எனது தீர்மானமான அபிப்பிராயம்" என்று ஆச்சாரியார் தனது அறிக்கையில் கூறியிருக்கிறார். பி. சி. ஜி. ஊசியின் காரணமாக கோயம்புத்தூரில் ஒரு பெண்ணுக்கு கண் குருடாகிவிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முதற்கண், பி. சி. ஜி. ஊசி நன்மைபயக்குமா ஊறுபயக்குமா என்பது ஒருபுறமிருக்க, அறிக்கைதருமளவிற்கு ஆச்சாரியாருக்கு எவ்விதத் தகுதியும் கிடையாது. ஆச்சாரியார் மருத்துவக்கலை பயின்றவரல்ல, ஆகவே மருத்துவத்தைப்பற்றி இப்படியொரு அறிக்கை வெளியிட எந்த அறிவு பயன்பட்டதோ தெரியவில்லை. ஒருகால் அவரது அந்தராத்மா கூறியிருக்கலாம்! உண்மையில் ஆச்சாரியாருக்கு பி. சி. ஜி. ஊசி குத்தும் இயக்கம் கேடு விளைவிப்பது என்று தோன்றியிருந்தால் அதைப்பற்றி மருத்துவ வல்லுநர்களைக் கலந்தாலோசிக்கவேண்டுமேயன்றி மக்கள் மன்றத்தில் ஏறிநின்று கூவக்கூடாது.

இதற்கு சர்க்கார் கொடுத்த பதிலறிக்கை ில் பி. சி. ஜி. ஊசிகுத்தல் தீமையற்றது ன விளக்கியிருக்கின்றனர். இந்தியாவில் 949-லிருந்து மொத்தம் 1,87,22,175 பேருக்கு ந்த ஊசி குத்தப்பட்டிருக்கிறதாம். அவர் ளில் யாருக்கும் எவ்வித தீங்கும் ஏற்படவில் லையாம். இதை ஆதரிக்கும் வகையில் சென்னை ன்னுள் வைத்திய இலாக்கா டைரக்டரான ாக்டர் வாசுதேவ ராவ் கடலூரில் ஒரு ட்டத்தில் பி. சி. ஜி. ஊசிபோடுவதால் எவ் ிதத்தீங்கும் நேரிடாது என்று கூறியுள்ளார். . சி. ஜி. மருந்தால் ஆபத்தில்லை யென்று லக நிபுணர்களின் ஆதரவும் கிடைத்து, ந்திய சர்க்கார் க்ஷயரோக ஆலோசகர் ஆச் ாரியாருக்கு அறிவித்துள்ளார். கோயம்புத் ூரில் ஏற்பட்ட சம்பவத்தை நன்கு ஆராய்ந்து ஒரு முடிவு கூற சென்னை சர்க்கார் ருத்துவக்குழு ஒன்றை நியமித்திருக்கிறது. ிவவளவிற்குப் பிறகும் ஆச்சாரியார் தனது ற்றொரு அறிக்கையில் நம்பிக்கையில்லை ன்று தெரிவித்துள்ளார்.

உண்மையில் ஆச்சாரியாரின் போக்குதான் ப்பொழுது பீதியைக் கிளப்பிவிடுமளவிற்கு ருக்கிறதென்று கூறலாம். ஆச்சாரியாரின் றிக்கைகள் அறிவியல் மனப்பான்மையை றிக்க அமைவதாக இருக்கிறது. பி. சி. ஜி. சி குத்தல் தீமையல்ல என்று உலக அறி யல் வல்லுநர்கள் அறிவிக்கும்போது, அந்த றிவில்லாத ஆச்சாரியார் தனது பழைய ையை விட மறுத்தால் அவர்தம் போக்கை ன்னென்று சொல்வது? நமது நாடு மூடக் ாள்கைகளில் ஊறித்திளைத்திருக்கும் நாடா ம். அறிவியல் மனப்பான்மை வளர்ந்தால் ன், மூடக்கொள்கைகள் மறையும். ஆனால் ச்சாரியார் தற்போது கொடுக்கும் அறிக்கை பாமர மக்களிடம் ஊசிபோடுவதைப்பற் ிய ஒரு பயத்தைக் கிளப்பிவிட்டு, அம்மை ாய் முதலியன வந்தால் அம்மை ஊசி குத் கொள்ளாமல் மாவிலை வேப்பிலை என்று ித்துக்கொண்டு சூரனையும் மாரியையும் சுற் தான் செய்வார்கள்.

ி. சி. ஜி. ஊசி குத்தியபிறகு சிலருக்கு ாவது நேர்ந்தால் அதற்கு பி. சி. ஜி. சிதான் காரணம் என்று திட்டவட்டமாகக் ிடுவது அறிவியற்காலத்திற்குப் பொருந் ததாகும். ஆகவே ஆச்சாரியார் இத்த ய விபரீத வழிகளில் இறங்காமல் பஜகோ ிதம் பாடிக்கொண்டிருப்பதே மேல் என்று ண்ணுகிறோம்.

ஃ ஃ ஃ

பலிபீடத்தில் வீழ்ந்த

மணிமகுடம்

வடநாட்டிலே கோயில்கொண்டுள்ள பத்ரி நாதனுக்கு நவரத்தினங்களாலான கிரீடம் ஒன்று தயாரிக்கப்பட்டிருப்பதாக செய்தி வெளிவந்திருக்கிறது. அந்த மணிமகுடத்தின் மதிப்பு சுமார் 4 லட்சம் ரூபாயாகுமாம்; சுராஜ்மல்ஸ் கம்பெனியார் தயாரிப்பாம்; இதற்கான செல்வத்தை தென்னாட்டு பக்தர்கள் அளித்திருக்கிறார்களாம். வடநாட்டிலே எழுந்துள்ள எல்லாங்கடந்த எம்பிரானுக்கு வடநாட்டு வணிகக்கோமான் மணிமகுடம் செய்துள்ளார் தென்னாட்டவரின் உழைப்பைப் பெற்று. தென்னாட்டு கோயில் மான்யங்களில் ஒரு லால்சந்து, ஒரு செல்லராம், டாட்டா, பிர்லா, சேட்ஜி இவர்களின் பெயரை நாம் காணமுடியாது. ஆனால் தென்னாட்டவரின் உழைப்பினால் பத்ரிநாதரின் தலையில் மணிமகுடம் ஏறுகிறது. ஐயோ! தென்னாடே! கோயில் காரியங்களிலுமா வடநாடு வளம் பெறவேண்டும்!

4 லட்ச ரூபாய் மணிமகுடத்தை பெற்றபின் பத்ரிநாதர் நமது பண்டித நேருவைக் கூப்பிட்டு "இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது தென்னாட்டிற்குக் கொஞ்சம் செலவழியுங்கள்" என்று சொல்லப்போகிறாரா என்ன? இப்படிக் கோயில் காரியங்களுக்காக நாம் கோடிக்கோடியாக லட்சலட்சமாக செலவழித்தும் இந்தக் கடவுள்கள் நம்மீது இரக்கம்கொள்வதே இல்லை. சென்ற ஐந்து நூற்றாண்டுகளில் ஏற்பட்ட அறிவியல் கண்டுபிடிப்புகளை யெல்லாம் மனிதனுக்குத் தேவையான வாழ்க்கை வசதிகளை யெல்லாம் மேலை நாடுகளிலும் அமெரிக்க நாடுகளிலும் இந்தக் கடவுள்கள் படைப்பானேன்? நம்மை இங்கு தரித்திர நாராயணர்களாக தெருவில் விடுவானேன்? கோவில் கும்பாபிஷேகங்களுக்குக் குறைவில்லை; தூபதீப நைவேத்தியங்கள் செய்யாமலில்லை; தேர் திருவிழா இல்லாத நாளில்லை. எல்லாம் இருந்தும் வசதிகள் இல்லை; மாறாக சோலைவனம் பாலைவனமாக மாறிக்கொண்டிருக்கிறது.

பத்ரிநாதர் தலையில் 4 லட்ச ரூபாய் கிரீடம் ஏறுகிறதென்றால் வடவர் அமைத்த பலி பீடத்தில் தென்னவரின் மணிமகுடம் வீழ்ந்தது என்றுதான் பொருள்! என்று மாறுமோ இந்நிலை?

ஆண்டியைக் காதலித்த அரசி!

பிரான்சு நாட்டை ஆட்டிப்படைத்த அரசிகளில் மேரி அரசி (Queen Mary) என்பாளும் ஒருத்தி ஆவாள். அவள் ஆண்டுகொண்டிருந்தபோது, அவள் நடத்திய அடாத செயல்களும், காதற் களியாட்டங்களும் பலப் பல.

ஒரு பொழுது இத்தாலி நாட்டைச் சேர்ந்த இசைக்கலைஞனை டேவிட் ரிச்சியோ (David Rizzio) என்பான் நாடோடிப் பாடகன் நிலையில், மேரியின் அரண்மனையின் வாயிலண்டை வந்தடைந்தான். அவன், களைப்பால் அரண்மனையின் ஒரு பகுதியில் சோர்ந்து படுத்து உறங்கிவிட்டான். தற்செயலாக அவனைக் காண நேர்ந்த அரசி, 'கண்டதும் காதல்' என்ற முறையில் அவன்மீது காதல்கொண்டாள். நாளடைவில் அவனைத் தன் அருமைக் காதலனாக ஏற்று, அவனுக்குத் தன் அரச அவையில் முக்கியமான — முதன்மையான இடம் அளித்திருந்தாள். சிறிது காலத்திற்குப் பிறகு அவன் பிரான்சு நாட்டின் முதல மைச்சராக ஆக்கப்பட்டான். அரசியின் முழு அன்பும் தன்பால் இருக்கும்போது யார் என்ன செய்யமுடியும் என்ற ஆணவத்தில் அவன் அடாத முறையில் ஆட்சிபுரிந்துவந்தான். டேவிட் ரிச்சியோவுக்கு அரசி அளித்துள்ள அளவுக்கு மீறிய உரிமையையும் அதனை அவன் பயன்படுத்திக்கொண்டு அடாத செயல்புரியும் தன்மையையும் கண்டு சீமான்கள் பலர்கொதித்தெழுந்தனர். ரிச்சியோவுக்கு எதிராகக் கிளம்பினர். ஒருநாள் அரண்மனையில் அரசியின் கண்ணுக்கு எதிரிலேயே சீமான்கள் பலர் கூடிக்கொண்டு ரிச்சியோவை கண்டதுண்டமாகக் குத்திக் கொன்றனர். மேரி அந்தக் காட்சியைக் கண்டு கண்ணீர்வடிப்பதைத்தவிர வேறு எதுவும் செய்யமுடியவில்லை. இடைக்காலத்து மேரி நாட்டின் ஆட்சிமுறை எவ்வளவு இழிந்த முறையில் ஆணவத்தோடு நடைபெற்றிருக்கிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

டேவிட் ரிச்சியோவை, மேரி அரசி ஆண்டிக் கோலத்தில் முதன்முறையாகக் கண்டு காதல்கொள்ளும் கட்டமே அட்டைப் படமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

சங்கரன் முன்னேற்றத் தனிப்பயிற்சிக்கூடம்

இவ்வாண்டுத் துவக்கம் : 10 - 6 - 55-இலிருந்து

உயர்நிலைப்பள்ளி, இறுதிவகுப்பு கல்லூரியின் எல்லா வகுப்புகள் முதலியவற்றின் தேர்வில் கலந்துகொள்ள சிறந்தமுறையில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

நம் வாழ்நாளைய ஈடு இணையற்ற
பெரும் புலவர், புரட்சிக் கவிஞர்

பாரதிதாசன்

தமிழ்ப்பாடங் கற்பிப்பார்.

மிஸஸ். ஜூடித் லூயி
பி. ஏ. (ஆனர்ஸ்)
துணைத்தலையாயர்

என். ஜே. தேவதாஸ்
எம். ஏ.,
தலையாயர்,



பலிவெளியில்

இரா. செழியன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

வெளியில் மழை நன்றாகப் பெய்துகொண்டிருந்தது. இன்னும் சாரலுக்கு ஒதுங்கி, மடத்தின் ஓரத்தில் நின்றுகொண்டிருந்தால், சிறிது நேரத்துக்குள் முழுவதும் நனைந்துவிட வேண்டிய நிலை ஏற்படும். ஆதலால், குமரதாசர் அழைத்ததும் நான் மடத்தினுள் சென்றேன்.

அப்பொழுது உள்ளே யாரும் இல்லை, மூலையில் விளக்கொன்று எரிந்துகொண்டிருந்தது. அதிலும் அதிக வெளிச்சமில்லை. குமரதாசரைத் தவிர வேறு யாருமில்லாததால், நான் தனியாக அங்கு போவது சரியல்ல என்று எனக்குத் தோன்றியது. திரும்பிப் போய்விடலாம் என்று கிளம்பினேன். என் தடுமாற்றத்தைப் புரிந்துகொண்டவர்போல, குமரதாசர் சிரித்துக்கொண்டு "ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். இப்படி நீங்கள் உட்காருங்கள்!" என்று கம்பளம் விரிக்கப்பட்ட இடத்தைக் காட்டி, மங்கி எரிந்துகொண்டிருந்த விளக்கைத் தூண்டிவிட்டார். விளக்குப் பிரகாசமாக எரிந்தது. அந்த நெய்விளக்கு ஆசாரத்துக்காகப் போடப்பட்டது. மற்றும் பல மின்சார விளக்குகள் தொங்கிக்கொண்டிருந்தன. அவற்றில் ஒன்று எரிய ஆரம்பித்தது. அந்த இடத்தில் வெளிச்சம் அதிகமானதும், நான் சற்று அச்சம் நீங்கி, உட்கார்ந்தேன்.

குமரதாசர் சுவற்றில் வைக்கப்பட்டிருந்த பூஜை மாடத்துக்கு முன் உட்கார்ந்தார். பூஜை மாடத்தில், ஆறுமுகக்கடவுள் மயில்மீது அமர்ந்திருக்கும் தோற்றம்—வள்ளி, தெய்வயானை இருபக்கங்களிலும் அமர்ந்திருக்க—அந்த படத்துக்கு மாலை, மணி போன்ற அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன.

"இது நான் பூஜை செய்யும் நேரம்!" என்று குமரதாசர் சொன்னார். "கொஞ்சம் பொறுக்க வேண்டும்!"

நான் ஒன்றும் பேசாமல் அவர் பூஜை செய்வதைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அவர்—சிறந்த பக்தர்—ஏதோ பாடல்களை மந்திரங்களை முணுமுணுத்தார். மலர்களை எடுத்து படத்தின்முன் தூவினார். பின் நெடுநேரம் கண்ணை மூடிக்கொண்டு பக்தி சிரத்தையுடன் உட்கார்ந்திருந்தார். அவர் கண்களிலிருந்து, கண்ணீர் வழிவது விளக்கு வெளிச்சத்தில் தெரிந்தது. பக்தியின் உச்சநிலையில், அடியார்கள் கண்ணீர் பெருக்குவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அந்தக் காட்சியை அன்றுதான் நான் பார்த்தேன்.

வெளியில் மழை நின்றுவிட்டதா என்று எழுந்து ஜன்னல் வழியாகக் கையை நீட்டிப் பார்த்தேன். இன்னும் தூறல் இருந்தது.

"இன்னும் மழை விடவில்லைபோலிருக்கிறது! இதோ!" என்று குமரதாசர் பூஜையை முடித்துக்கொண்டு எழுந்து, முருகனின் திருவடிகளில் கிடந்த மலர்களில் இரண்டை எடுத்துத் தன் காதுகளில் சொருகிக்கொண்டு, ஒரு மலரை எடுத்து என்னிடம் தந்தார். நான் வாங்கி பக்கத்தில் வைத்துக்கொண்டேன்.

குமரதாசர், ஒரு பெரிய புத்தகத்தை எடுத்து, தன்முன் வைக்கப்பட்ட அடுக்கில் வைத்துப் படிக்க ஆரம்பித்தார்—பாட ஆரம்பித்தார். அந்த நூல்—திருப்புகழ்! அவருக்கு மிகவும் பிரியமான பாடல்கள்! கேட்பதற்கு மிக இனிமையாக இருந்தன.

முதலில் அவர் பாடியது "கைத்தல நிறை கனி அப்பமொ டவல்பொரி" என்ற பாட்டு

பாடும்பொழுதும், ஒவ்வொரு அடியை முடிக்கும்பொழுதும், சிறிது சிறிது நிறுத்தி, வழக்கமாகக் காலட்சேபம் செய்வதுபோல, சொற்களைப் பிரித்துக் காட்டி, அர்த்தம் சொல்லிக்கொண்டுபோனுர். சில இடங்களில், அவர் சொல்லுகிற, சித்தாந்த வேதாந்த விளக்கங்கள் எனக்கு ஒன்றும் புரியவில்லை. நான் என்ன வேதாந்த விசாரணை செய்யவந்தேனு, அல்லது காலட்சேபம் கேட்கத்தான் வந்தேனு? ஏதோ, மழைக்காக ஒதுங்கினேன். இங்கே இந்த பக்தர், பிரசங்கம் செய்ய ஆரம்பித்துவிட்டார். வேறு வழியின்றி நானும் அவற்றைக் கேட்டுக்கொண்டிருந்தேன். பாட்டுப்பாடும்பொழுது கேட்பதற்கு நன்ருக இருப்பதால், அதைக் கேட்பேன். அதை முடித்து, அவர் அர்த்தமும், விளக்கமும் சொல்லும்பொழுது, வெளியில் மழை நின்றுவிட்டதா என்பதில் என் கவனம் சென்றுவிடும். இதைக் கவனித்த குமரதாசர், உரை செய்வதை மட்டுப்படுத்தி, பாடுவதை அதிகமாக்கிக்கொண்டார். அர்த்தம் புரியாவிட்டாலும், "தனத்தனந், தந்ததான," என்று தாளத்தைப்போட்டு அவர் பாடுவது வேடிக்கையாகவும் இருந்தது.

மழை முன்னைவிட அதிகச் சத்தத்துடன் பெய்தது. அந்தச் சத்தத்தை மீறிக்கொண்டு, குமரதாசர் பாடினுர், ஒரு பக்கத்தைப் புரட்டி "இதோ! இந்தப் பாட்டு மிக அழகானது!" என்று ஆரம்பித்தார்.

"இருகுழையெ றிந்த கெண்டைகள்
ஒருகுமிழ டர்ந்து வந்திட"

பெண்ணின் காதுகளில் இரண்டு குழைகள் ஊசலாடுகின்றன. அந்தக் குழைகளை எதிர்த்துப் போராடுவதுபோன்று, கண்களின் கெண்டை விழிகள் சுழல்கின்றனவாம். அந்த இருவிழிகளின் நடுவில் அடர்ந்து வருமாறு, குமிழ்போன்ற மூக்கு எழுந்திருக்கிறது. பெண்களைப் பற்றிய வர்ணனை! அந்தப் பக்தர் திருப்புகழ் பாட்டைப் பாடிக்கொண்டிருந்தார். பாட்டைக் கேட்கும்பொழுது, அதன் இனிமையாலோ, அல்லது தூக்கம் வரும் நேரம் அதிகம் ஆனதாலோ என்னவோ, எனக்குத் தூக்கம் வரும்போலிருந்தது. கண்ணைச் சற்று மூடிக்கொண்டு இருந்தேன்.

பாட்டு மெதுவாக வந்துகொண்டிருந்தது, வரவர என் அருகே வருவதுபோலிருந்தது. திடீரென்று என் தோளின்மீது ஏதோ ஊர்வதுபோலிருந்தது, கையை உதறிக்கொண்டு பார்த்தேன். ஏதாவது தேள், பாம்பு ஊர்கிறதோவென்று. தேள், பாம்பு இல்லை, குமரதாசர் பக்கத்தில் மண்டியிட்டு உட்கார்ந்திருந்தார்.

"ஏ!" என்று நான் எழுந்து நின்றேன். அந்தப் பாவி பாடுவதை நிறுத்தவில்லை.

"முருகொருக லந்த சந்தன
அளறுபடு குங்கு மங்கமழ்
முலைமுகடு கொண்டெ ழுந்தோறும்."

பாடிக்கொண்டே வெறித்த பார்வையுடன் அவன் என்னை நெருங்கி, கையைப் பிடித்தான். நான் திமிறிக்கொண்டு ஓடினேன். கதவு எந்தப்பக்கத்திலிருக்கிறதென்று புரியவில்லை. சுற்றிலும் பார்த்தேன். அவன் திருப்புகழ் பாட்டைக் கனிவுடன் பாடிக்கொண்டு வருவதுதான் தெரிந்தது.

ஐயோ! மோசம்போனேன்! எப்படித் தப்பித்துக்கொள்வது என்று திகைத்து நின்றேன். கடைசியாக உற்றுப் பார்த்தேன். கதவு இருந்த இடம் தெரிந்தது.

ஆவலோடு ஓடிப்போய் கதவைப் பிடித்துக்கொண்டு நான் நின்றேன். அவன் ஓடிவந்து என்னைப் பின்தள்ளி, கதவைச் சாத்த முற்பட்டான். "ஐயோ! ஐயோ!" என்று நான் சத்தம்போட்டேன். "ஐயனே! ஐயனே! அப்பனே!" என்று பாட்டுப் பாடுவதுபோல் அவன உரக்கச் சத்தம்போட்டான். கதாகாலட்சேபம் செய்து—திருப்புகழ்பாடி—கனமாகியிருக்கும் அவன் குரலுக்குமுன், என் மெல்லிய குரல் என்ன செய்யமுடியும்? அவன் குரலை மீறிக்கொண்டு என்னுல் கூக்குரல் போடமுடியவில்லை. ஆனுலும் திறந்த கதவை, சாத்தவிடாமல், நான் பலம் முழுவதையும் கொடுத்து தள்ளிக்கொண்டிருந்தேன். அதன் என்னை உள்ளே தள்ளிக் கதவைச் சாத்த முயன்றுகொண்டிருந்தான். என் பலம் முழுவதையும் வைத்து நான் போராடிக்கொண்டிருந்தேன்.

திடீரென்று அவன் கதவிலிருந்து கையை எடுத்துக்கொண்டான். நான் முழுவலிவுடன் கதவின்மீது சாய்ந்துகொண்டிருந்ததால், எதிர்ப்பு விடுபட்டதும், கதவிலிருந்து கை நழுவி, கீழே விழுந்தேன். அவன் சிரித்துக்கொண்டு நின்ருன். ஆனுல் ஒரு கதவு சற்றுத் திறந்துவிட்டது. நான் அதன் வழியாக வெளியே ஓடிவிடலாம் என்று அடிவைத்தேன்.

"எங்கே போகப் பார்க்கிருய்?" என்று

றுவன் என் முகத்தில் அறைந்தான். மூக்கில் அடிபட்டு இரத்தம் கசிந்தது. என் கண்கள் சுழல ஆரம்பித்தன. பொறி கலங்கி, மயக்கத் துடன் சாய்ந்துவிட்டேன்.

உணர்வு வந்து, கண்விழித்தபொழுது, ற்றிலும் இருள். தட்டுத் தடுமாறி எழுந்து ட்கார்ந்தேன். தூரத்திலிருந்த அகல் ிளக்கு மினுக்மினுக்கென்று எரிந்துகொண் ருந்தது. அதுவும் அணையுந்தருவாயிலிருந் து. மடத்தினுள்தான் இருக்கிறோம் என்ற னைவு வந்தது. எழுந்து சுற்றிலும் பார்த் தன். அந்தக் காமுகனைக் காணோம். மானின் இரத்தத்தைக் குடித்த புலி, மான் பக்கத்தில் ாவல் புரிவதில்லை.

கதவு திறந்துகிடந்தது. நான் வெளியே ந்தேன். கடுமையாக இல்லாவிட்டாலும், ழை தூறிக்கொண்டிருந்தது. நான் கடந்து காண்டிருந்தேன், உணர்வற்று. என் முகத் ன்மீது மழைத்துளிகள் பட்டன. அவை, ன் கண்களிலிருந்து வழிந்த கண்ணீருடன் லந்து வழிந்தன.

என் வீட்டிற்கருகில் வந்துவிட்டேன். னால் வீட்டிற்குள் போகவேண்டுமென்ற ண்ணம் எனக்கு உண்டாகவில்லை. பேசாமல் ண்ணையில் உட்கார்ந்தேன். வெளியில் ந்த என் சித்தப்பா—நான் வராததைக் றித்து அவர்கள் கவலையுடன் காத்திருக்க வண்டும்—நான் உட்கார்ந்ததைப் பார்த்தார். கார்ந்ததையல்ல, தள்ளாடி விழுவதைப் ர்த்தார். "சகுந்தலா!" என்று அவர் ச்சலிட, விட்டினுள்ளிருந்து சின்னம்மா ந்து, என்னைத் தாங்கி உள்ளே அழைத்துச் ன்றார்கள். "ஏன் இப்படி நனைந்தாய்? ள்ளிக்கூடத்திலிருந்து ஆளை அனுப்பினால், டை அனுப்பியிருப்போமோ!" "மழையில் கு தங்கியிருந்தாய்?" அவர்கள் ஏதேதோ ள்விகள் கேட்டபடி இருந்தனர். அவர்கள் ட்ட கேள்விகளுக்கெல்லாம் என்னால் எப் பதில் சொல்லக்கூடும்! அவர்கள் பரி ன், மழையில் நனைந்துவிட்டேனே யென் தான் கேட்டார்கள். பரிதாபத்துக்குரிய னால், கண்களிலிருந்து வழியும் நீரைத் டைப்பதற்குக்கூட முடியவில்லை.

புடவையில் இவ்வளவு சேறுபட்டுவிட் தே!" என்று சின்னம்மா சொன்னார்கள். மனதில் வீசப்பட்டிருந்த சேற்றை— ங்கத்தை அவர்கள் அறியமாட்டார்கள்.

ன்று நான்கு நாட்கள் கடுமையான காய்ச் ஒருவாரங்கழித்துதான் பள்ளிக்கூடத் துக்குப் போகமுடிந்தது. முதல்நாள் பள்ளிக் கூடத்துக்குப் போகும்பொழுது, அந்த மடம் இருக்கும் தெருவழியாகப் போகாமல், சுற்றிக் கொண்டு போனேன். அந்த மடத்தைத் தூரத்திலிருந்து பார்க்கும்பொழுதே கோப மும் ஆத்திரமும் வந்தது. பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்ற எண்ணம் வந்தது.

வகுப்பிலிருக்கும்பொழுதும், வீட்டுக்கு வரும்பொழுதும் எப்படி வஞ்சந்தீர்த்துக் கொள்வது என்ற ஆராய்ச்சியில் என் மனம் ஈடுபட்டிருந்தது. விஷம், திராவகம், சுருக்கு, கத்தி—இப்படிப் பலப்பல, பழிவாங்கும் பயங் கரச் சாதனங்கள் என் மனதில் வந்துபோயின. இவற்றில் விஷம், திராவகம் முதலியன கிடைப்பது கடினம். கடைசியாகக் கத்தி தான் சரியானதாக எனக்குப்பட்டது. பழிக் குப்பழி என்ற கடுமையான வெறுப்பு கத்தி யில் பிரதிபலித்தது. மேலும் நாம் படிக்கும் பெரும்பாலான கதைகளில், பழிக்குப்பழி வாங்கும் கட்டத்தில் பளபளப்பான கத்தி தானே உபயோகப்படுத்தப்படுகிறது, சரி என்று வீட்டில் பழுதடைந்து, துருப்பிடித்துக் கிடந்த பழைய கத்தி ஒன்றை எடுத்து, மிகக் கஷ்டப்பட்டுத் தீட்டிவைத்தேன். கத்தி தயா ராகிவிட்டது. இனி அந்தக் கயவனைப் பார்க்க வேண்டியதுதான் பாக்கி.

எந்த நேரத்துக்கு மடத்துக்குள் போவது' முன்னெச்சரிக்கையாக என்ன செய்வது' போனவுடன் கோபமில்லாதவள் போல— தானாக விரும்பி வந்தவள்போல எப்படி நடிப்பது என்றெல்லாம் நான் திட்டமிட்டுக் கொண்டேன். திட்டங்களில் சிறுசிறு அம்சங் கள்—கத்தியை எப்படி ஒளித்துவைத்திருப் பது, எப்படிப் பேசிக்கொண்டு அருகில் போகும்பொழுதே கத்தியை எடுத்துக் குத்து வது, குத்தும்பொழுது எப்படிச் சிரித்துக் கொண்டு பேசுவது என்று யோசித்துவைத் திருந்தேன்.

ஒரு நாளைக் குறிப்பிட்டு, பள்ளிக்கூடம் மாலை விட்டதும் உடனே கிளம்பாமல், நேரங் கடத்திச், சற்று இருட்டியதும், கிளம்பினேன். யாரும் பார்க்காவண்ணம் மெதுவாக நடந்து, மடத்தின் முன்படிக்கட்டுக்கு வந்து சேர்ந் தேன். மடத்தில் விளக்கு வெளிச்சம் இல்லை. கதவு மூடப்பட்டிருந்தது. மெதுவாகத் தள்ளி னேன். கதவு திறந்துகொண்டது. உள் அடி யெடுத்து வைத்தேன்.

"யாரது?" என்று உள்ளிருந்து குரல் வந் தது. அது பக்சர் குமரதாசரின் குரலாகத் தெரியவில்லை. மேல் நடக்காமல் அப்படியே

நின்றேன். கையில் சிறு விளக்குடன், கிழவன் வந்தான். அவன்தான் மடத்துப் பின்பக்கத்திலிருந்த தோட்டத்தில் காவற்காரனாக இருப்பவன்.

என் திட்டத்தில், காவற்கார கிழவன் வருவான் என்று குறிப்பிடவில்லை. ஆனாலும், அவன் அருகில் வருவதற்குமுன், தலையில் போட்டிருந்த முக்காட்டைத் தளர்த்திக் கொண்டு, "இன்றைக்குக் காலட்சேபம் இல்லையா?" என்று குரலை மாற்றிக்கொண்டு சொன்னேன். மற்றவர்களுடன் பேசும்பொழுது, அடையாளந் தெரியாதபடி குரலை மாற்றிக்கொள்வது என்பதை முன்பே குறித்திருந்தேன்.

"காலட்சேபம் இல்லிங்களே! குமரதாசர் ஊருக்குப் போயிருக்கார்! அடுத்தவாரம் வந்திடுவார்! காலட்சேபம் இருக்கும்!" என்று கிழவன் சொன்னான்.

அந்த பக்தர் அன்று இல்லாமற்போனது எனக்கு ஏமாற்றத்தை அளித்தது. இருந்தாலும் எனது முயற்சியைக் கைவிடவில்லை. ஒரு வாரங் காத்திருந்தேன். அவன் வரவில்லை, காலட்சேபமும் நடைபெறவில்லை.

பின்பு மடத்தில் காலட்சேபம் நடைபெறப் போவதாகச் சொன்னார்கள். மடத்துக்கு வந்தேன். வேறு யாரோ—முன்பின் தெரியாத ஒருவன்—யாரைக்கெடுக்கத் திட்டமிட்டு அவன் வந்தானோ தெரியாது—மார்க்கண்டேயர் சிரஞ்சீவித்தன்மை பெற்றதைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தான்.

வாரங்கள் கடந்தன. ஆனாலும் அந்தக் காமுகன் எங்களூர்ப்பக்கம் வரவேயில்லை. ஏமாற்றமடைந்த நிலையில், ஒரு பயங்கர இடி என்மீது விழுந்தது. என் வயிற்றில் கரு வளர்வதை உணர்ந்தேன்!

உலகத்திடமிருந்து ஊரிடமிருந்து, எப்படி என்னைக் காப்பாற்றிக்கொள்வது? தற்கொலை செய்துகொள்வது என்று அடிக்கடி தோன்றும். உலகத்தின பழி செத்த பிணத்தையும் சும்மா விடுவதில்லை. என்ன செய்வதென்று புரியவில்லை. யாரிடம் யோசனை கேட்கமுடியும்? எப்படிச் சொல்வது? தணலில் நிற்பவள்போலத் தத்தளித்தேன். என்னை அவமானத்திற்குள்ளாக்கிய கயவனின்மீது வஞ்சந்தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஆத்திரத்துடன் திட்டமிட்டுக் கொண்டிருந்த நான், என்மீது படரவிருக்கும் பழியை எவ்வாறு தடுப்பது என்பதை யோசிக்கவேண்டிய சோகநிலைக்கு ஆளானேன். சோகநிலையில் எண்ணங்கள் சுலபத்தில் உருவாவதில்லை. காலையில் நினைப்பது மாலையில் பயங்கரமானதாகத் தோன்றும், இரவு படுக்கையில் செய்த முடிவான எண்ணம் காலை விடிந்ததும் தவறுடையதாகிவிடும்.

மேலும் தாமதிப்பது கடினம் என்று தோன்றியது, இனி அந்த ஊரில் இருக்க வேண்டாமென்று முடிவுசெய்தேன். ஒருநாள் காலை ஊரைவிட்டுப் புறப்பட்டேன், செங்கற்பட்டில் என்னுடன் படித்த பெண்ணொருத்திக்குத் திருமணமென்றும். அதற்கு நான் போகவேண்டுமென்றும் கூறிக்கொண்டு, செங்கற்பட்டு வந்து சேர்ந்தேன். பின் அங்கிருந்து சென்னை வந்து சேர்ந்தேன்.

சென்னையில் நாலைந்து மாதங்கள் பள்ளிக்கூடமொன்றில், தற்காலிக வேலை கிடைத்தது. இங்கு எனக்குத் திருமணமாகிவிட்டதென்றும், என் கணவர் இறந்துவிட்டாரென்றும் சொல்லிவைத்தேன். வேறு வழியில்லை. வயிற்றில் குழந்தை, கழுத்தில் தாலி கிடையாது! இதைவிட ஏற்றுக்கொள்ளக்கூடிய சமாதானம் கொடுக்கமுடியவில்லை. முதலில் சேர்ந்த பள்ளிக்கூடத்தில் நெடுநாட்கள் இருக்கவில்லை. அதற்கப்புறம் இரண்டு மூன்று பள்ளிக்கூடங்களில் இருந்தேன். கோடை விடுமுறை வந்தது பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டன. எனக்கு வேலையில்லாமற் போய்விட்டது.

பூரண கர்ப்ப நிலை, வேலையில்லாக் கொடுமை! வேலைதேடி ஊரைச் சுற்றிவந்தேன், அந்தச் சமயத்தில்தான், ஓரிடத்தில் பஸ்ஸுக்காகக் காத்துக்கொண்டிருக்கும்பொழுது, மயக்கம்போட்டு விழுந்தேன், பின் உணர்வு வந்தபொழுது ஆஸ்பத்திரியில் இருந்தேன். டாக்டர் தங்கம் என் பக்கத்தில் இருந்தார்கள்.

(தொடரும்)

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநா(டு)
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—
ஆறு திங்கள் ,,	3—0—0	
தனி இதழ் ,,	0—4—0	0—5—



(24)

மதிற்சுவரைத் தாண்டி உள் புகுந்த அக்னி தவனுக்கு—இல்லை, புறு உருவத்திலிருந்த ஃக்னிதேவனுக்கு அவன் எதிர்பாராத ாட்சி காத்துக்கொண்டிருந்தது. சிவபெருமா னும், உமாதேவியாரும், மெய்மறந்த ஆனந்த லையில் மஞ்சத்தின்மீது இருந்தனர். ஐயன் இருக்கும் அலங்கோலத்தைப் பார்த்ததும், ஃக்னிதேவன் ஆச்சரியமடைந்தான்.

காவல்காத்த பூதகணங்கள், “ எம்பிரான் மாபிராட்டியாருடன் லோக விவகாரங்களைப் ற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார் !” என்று சான்னார்கள். ஆனால் அந்தப்புரத்தில் மறை ாக நுழைந்து பார்த்தால், “ லோகவிவகா ங்களைப் பற்றியல்ல, லோகத்தில் சாதாரண ாக நடைபெறும் சிற்றின்ப விவகாரத்தில்— பசிக்கொண்டிருக்கையில். ஈடுபட்டிருக்கின் னர்.” அக்னிதேவன் சற்றுநேரம் திகைத் ப்போனான். கைலைவாசனைக் கண்டால், தவர்களுக்குற்ற கவலைகள் தீரும் என்று ஃக்னிதேவன் வந்தால், இங்கு அந்தக் கைலை ாசன் காமன் வீசிய வலையில் ஆழ்ந்திருக்கி ர். என்ன செய்வது ?

பேரின்பத்தின் உயர்ந்த இடம்—முடிவான லை என்று போற்றப்படுபவன் மாதேவன். ஆனால் அவர் சிற்றின்ப மோகத்தில் ஆழ்ந்து தவர்கள் படும் அவதிகளைக் கவனிக்காமல், லகம் படும் அல்லல்களை உணராமல், இருக் றார்.

‘காலிலே வலி, கை முட்டில் நமச்சல். வைத் யரிடம் போய் மருந்து வாங்கிவரலாம்’ ன்று வைத்தியர் வீட்டுக்கு வரும்பொழுது ங்கு சர்வ வியாதிகளையும் நொடிப்பொழுதில் ர்க்கவல்ல சகலகலா வைத்தியர் கால்கை டங்கி, முடக்கு வாதத்தால் அவதிப்பட்டுக் காண்டிருந்தால், கைகால்களில் வலி என்று வந்தவன் என்ன சொல்லமுடியும் ! அதைப் போல. பேரின்பமயமானவன், இடர்களைத் தீர்த்திடும் இறைவன் என்று போற்றப்படும் சிவபிரானை நோக்கி, அக்னிதேவன் வந்தான். ஆனால் பேரின்பமயமானவர் சிற்றிடையாள் தரும் சிற்றின்பத்தில் ஈடுபட்டு, இடர்களைத் தீர்த்திடும் இறைவன் காமத்துன்பத்தைத் தாங்கமுடியாது ஒரு நாள் இருநாளல்ல, பல ஆண்டுகளாக, அம்மையாருடன் போகத்தில் —தேவலீலையில் ஈடுபட்டிருக்கிறார்.

அந்தபுரத்திற்குள் நுழைந்த புறு, தூண் ஒன்றின்மீது உட்கார்ந்து மஞ்சத்தைப் பார்த்தபடி, தான் வந்த தூதை எப்படி நிறை வேற்றுவது என்று யோசித்துக்கொண்டிருந் தது. ஆண்டவனும், அம்மையும் நடத்தும் லீலை தாங்காமல் அம்சதுளிகா மஞ்சம் ஆடிக் கொண்டிருந்தது, என்ன செய்வதென்று தெரியாமல், புறு தூண்மீது உட்கார்ந்திருந் தது. எவ்வளவுநேரம் உட்கார்ந்திருந்ததோ தெரியாது !

தூணில் உட்கார்ந்து, ஒரு புறு கவனித்துக் கொண்டிருப்பதை பார்வதி முதலில் பார்த்து விட்டார்கள். உடனே நாணமுற்று, நிர்வாண மான உடலைத் தன் கைகளால் மூடிக்கொண்டு, ஐயனின் கரத்தை புறத்தே ஒதுக்கி, “அதோ! பாரும்!” என்று சாடையாகக் காட்டினார்கள். சிவபெருமான் திரும்பிப் பார்த்தார். புறு ஒன்று, தங்களுடைய லீலைகளைக் கண்காணித் துக்கொண்டிருந்தது !

சிவபெருமான் பார்த்த அளவிலே, புறு கீழே இறங்கிவந்து முன் நின்றது. முழுமுதற் கடவுளாதலால் வந்திருக்கும் புறு யார் ? எதற் காக வந்துள்ளது என்று தெரியும். ஆதலால் சிரித்துக்கொண்டு பேசாமல் இருந்துவிட்டார். ஆனால் உமாதேவிக்கு மட்டும் கோபம் மாற

வில்லை, தங்களுடைய காம இச்சையைத் தடுத்துவிட்டதே என்று! உடனே, புருவைப் பார்த்து, சக்தியின் அம்சமான பார்வதிதேவி, "எங்களுடைய இன்பத்தைக் கெடுத்ததால், கல்லித்தின்று வாழ்வாய்! சகோதரனென்றும், சகோதரியென்றும் பாராது காமத்தைத் தீர்ப்பாய்!" என்று சாபமிட்டார். அம்மையாரின் சாபம் பலித்தது. சாபம் பலித்ததென்றால், அக்னிதேவனுக்கு ஒன்றும் நேரவில்லை. புருவைப் பார்த்துச் சாபம் தரப்பட்டதால், புருக்களெல்லாம் கல்லைத் தின்ன ஆரம்பித்தன. பாகுபாடின்றி ஜோடிப்புருக்கள் பறந்து விளையாடின! வேடமிட்டு, வேவுபார்க்கவந்த அக்னிதேவனுக்குச் சாபம் தரப்போய், அது வேடமிடப்பட்ட புருக்களுக்குத் தண்டனையாகத் தரப்பட்டது.

புருவுக்குச் சாபம் தரப்பட்டதும், புரு உருவத்தைவிட்டு அக்னிதேவன் தன் உண்மையான உருவத்தில் எழுந்து, சிவபெருமானை வணங்கினான்; தான் வந்த காரியத்தைச் சொன்னான்; அசுரர்களிடம் தேவர்கள் படும் அல்லல்களை விளக்கினான். சிவபெருமானுக்கு அவை தெரியாததல்ல, அவர் முழுதுணர்ந்த முழுமுதல் முக்கண் ஆண்டவனாயிற்றே! இருந்தாலும் அக்னிதேவன் அழுது புலம்பிக் கூறுவதை அமைதியாகக் கேட்டுக்கொண்டார். அக்னிதேவன் கூறிமுடித்ததும், ஐயன் அவனை அருகே விளித்து, "அக்னி! நீ கூறியவை எமக்குத்தெரியாததல்ல, அசுரர்களிடம் தேவர்கள் படும் அவதியை நாம் அறியாதவர்களல்ல! அசுரர்களை அழிக்க, தேவர்களைக் காப்பாற்ற ஒரு பிள்ளையைத் தரும் முயற்சியில்தான் நாமும் அம்மையாரும் ஈடுபட்டிருந்தோம். நீ வந்ததால் அதற்குத் தடையுண்டானது. இருந்தாலும், உங்களுடைய துன்பங்களை ஒழிக்க, அசுரர்களை ஒழிக்க, ஆறுமுகங்களுடைய நமது பிள்ளை வருவான்" என்று கூறினார். தலைதப்பியது போதுமென அக்னிதேவன் அந்த இடத்திலிருந்து, வெளியேறி, அசுரர்களை அழிக்க, ஆண்டவன் ஒரு பிள்ளையை அருளப்போகும் வெற்றிச் செய்தியை தேவர்களுக்கு அறிவித்தான்.

மாறுவேடம்பூண்டு சென்றபொழுது கிடைத்த சாபம் புருவுக்காயிற்று. அதைப்போல, மற்றொரு சமயம் அக்னிதேவன் மறைந்து சென்றபொழுது யானை, கிளி, தவளை, போன்றவைகளுக்குச் சாபங்கள் கிடைத்தன. உமாதேவி கொடுத்த சாபம் புருவின்மேல் விழுந்தது. ஆனால் யானை, கிளி, தவளை முதலியவைகளுக்கு அக்னியே சாபம் கொடுத்தான். ஒரு சமயம் சந்தனு என்ற மன்னன் யாகம் நடத்தினான். முனிவர்களில் தலைசிறந்தவர்களில் ஒருவராக விளங்கிய விசுவாமித்திரர் யாகத்தை கவனித்துவந்தார். யாகமென்றால், அதில் அக்னி மூட்டப்பட்டு, ஆடு, மாடு, குதிரை இவைகளின் மாமிசம் பதமாக்கப்பட்டு எல்லோருக்கும் பங்குதரப்படும். யாகப் புரோகிதர்கள் தங்களுடைய பங்கை எடுத்துக்கொள்ளுமுன், தேவர்களுக்கு —இந்திரன், அக்னி முதலானோர்க்கு மாமிசத்தை அறுத்துவைத்துப், படைப்பார்கள். இதுவே அவிர்ப்பாகம் என்று சொல்லப்படுவதாகும். சந்தனு நடத்திய யாகத்தில்," விசுவாமித்திரர் அந்த அவிர்ப்பாகங்களைப் பிரித்துத் தந்தார். அவ்வாறு தரும்பொழுது, நாயின் மாமிசம் அக்னிதேவனுக்குப் படைக்கப்பட்டுவிட்டது. வழக்கமாக குதிரை, ஆடு, மாடு இவைகள்தாம் தேவர்களுக்கு (பூதேவர்களுக்கும்) விருப்பமான—யாகப்பிரிதியான மாமிசங்கள். அவற்றை விடுத்து, நாய் மாமிசத்தைத் தந்ததால், அக்னிதேவன் கோபமடைந்து, யாகக்குண்டத்திலிருந்த நெருப்பைத் திரும்ப வாங்கிக்கொண்டு யாரும் அறியாவகையில் மறைந்துவிட்டான்.

அக்னி தன் தொழிலை நடத்தாமல் மறைந்ததும், சந்தனுவின் யாகத்தில் மட்டுமல்லாமல், பூலோகத்தில் மற்ற அரசர்கள், முனிவர்கள் நடத்திய யாகங்களிலிருந்த நெருப்புக்குண்டங்களும் அவிந்துவிட்டன. யாகக்குண்டத்தில் தீ இல்லாததால், முனிவர்களின் தவம் நின்றது, நித்திய கர்மங்கள் தடைப்பட்டன. அக்னியை வரவழைப்பது தெரியாது, முனிவர்கள் தேவர்களை வேண்டிக்கொண்டனர். தேவர்களால் மட்டும் தனித்து என்ன செய்ய முடியும்? அக்னியில்லையென்பதை தேவர்கள் பிரமதேவனுக்குத் தெரியப்படுத்தினார்கள். பிரமதேவன், அண்டசராசரங்களை உண்டாக்கியவர்—சிருட்டியின் கர்த்தா. ஆனால் அவருக்குக்கூட அக்னி ஒளிந்திருக்கும் இடம் தெரியவில்லை. எல்லோரும் முனிவர்கள், தேவர்கள், பிரமதேவன் எல்லோரும்—ஒன்றுகூடி, அக்னிதேவனைக் கண்டுபிடிக்கும் வேலையில் ஈடுபட்டனர்.

எல்லாவிடங்களிலும் தேடிவிட்டு, பூலோகத்தில் ஒரு காட்டில் நுழைந்தபொழுது, அங்கு மேய்ந்துகொண்டிருந்த ஒரு யானை, தூங்கிக்கொண்டிருந்த புதரைக் காண்பித்தது. அங்கு அக்னி இருப்பதை அறிவித்தது. உண்மையில் அக்னி அங்குதான் இருந்தான். தானிருக்கும் இடத்தை யானையொன்று காட்டிக்கொடுப்பதைக் கண்ட அக்னிதேவன, "யானையே! என்னைக் காட்டிக்கொடுத்தமையால், உன் கொ

கள் ஒடிந்துபோவதாக !" என்று சாபம் காடுத்துவிட்டு, மூங்கில் புதரிலிருந்து வெளியேறி பக்கத்திலிருந்த அரசமரத்தில் ளிந்துகொண்டான்' அக்னிதேவன் காடுத்த சாபத்தால், அந்த யானைக்கு மட்டு ல்லாமல் யானையின் வர்க்கத்துக்கே கொம்பு ள் ஒடிந்துபோகக்கூடிய நிலை பிறந்தது.

அரசமரத்தில் அக்னி நுழைந்தபொழுது, ந்த மரத்திலிருந்த கிளியொன்று அதைப் ார்த்துவிட்டது. அக்னியைத்தேடி பிரம தவன் அந்த மரத்தடியில் வந்து உட்கார்ந் ருந்தபொழுது, கிளையில் உட்கார்ந் ருந்த கிளி, " இந்த மரத்தில்தான் அக்னி தவன் இருக்கிறார்!" என்று பிரமனிடம் சால்லியது. கிளிகளுக்கெல்லாம் அப்பொ து நன்றாகப் பேசத்தெரிந்திருந்தது. கிளிப் ள்ளைத் தன்னைக் காட்டிக்கொடுப்பதைக் ண்ட அக்னிதேவன், " கிளிப்பிள்ளைக்குப் பச்சு ஒழிக !" என்று சாபமிட்டு, அரச ரத்தைவிட்டு அதனருகிலிருந்த குளத்திற் ள் மூழ்கி மறைந்துகொண்டான். அக்னியின் ாபத்தால், அவனைக் காட்டிக்கொடுத்தக் ளிக்குமட்டுமல்லாமல், மற்ற கிளிகள் எல்லா ற்றுக்குமே தாமாகப் பேசுவது நின்று, சான்னதைமட்டும் திரும்பச் சொல்லும் ஆற் ல் மிகுந்தது.

தண்ணீரில் ஒளிந்துகொண்டபோதும், அக் ியைக் " காட்டிக்கொடுப்பவர்கள் " இல்லா ற்போகவில்லை. குளத்தில் இருந்த தவளை ள் அக்னி இருப்பதைப் பிரமதேவனுக்கு றிவித்தன. இந்தத்தடவை அக்னிதேவ ல் தப்பிப்போக முடியவில்லை. பிரமதேவன் ண்ணீருக்குள் ஒளிந்திருந்த அக்னிதேவனை வெளியே கொண்டுவந்தார். தன்னைக் காட்டிக் காடுத்த தவளைகளுக்கு நாக்கு இல்லாமற் பாக அக்னிதேவன் சாபம் கொடுத்தான். ரமதேவனால் கண்டுபிடிக்கப்பட்டு வெளிவந் தும், அக்னிதேவனுக்குச் செய்யப்பட்ட றைபாடு நீக்கப்பட்டு, முன்போல அக்னி ருள, யாக குண்டங்களில் தீ மூள, முனிவர் ள் யாகங்கள் வளர்த்தனர் என்பது கதை— ாணக்கதை. யானைக்கொம்பு ஒடிந்துவிடுவ ற்கும், கிளி தானாகப் பேசமுடியாதிருப்பதற் ம், தவளைகள் நாக்கில்லாமல் இருப்பதற்கும் ந்தக் கதை காரணமாகக் காட்டப்படுகிறது.

ாய்மையற்ற பொருள்கள், அருவருக்கத் க்க பண்டங்கள், இவைகள் தீயில்—அக்னி ல் போட்டுவிடுகிறோம். இது நோய் பரவா ண்ணம்—நச்சுக்கிருமிகளை அழிப்பதற்குச் ய்யப்படும் முறையாகும். ஆனால் இதற்கும காரணங்கூறும் கதை புராணத்தில் இருக் கிறது.

பிரமனுடைய புத்திரர்களில் பிருகு என்ப வர் ஒருவர். மற்றவர்களைப்போல, முகத் திலோ, தோளிலோ அவர் பிறக்கவில்லை. பிரமனுடைய மனதில் அவர் பிறந்தவர். அதாவது, பிரமன் மனதில் நினைத்துக்கொண் டவுடன் பிருகு முனிவர் பிறந்துவிட்டார். அந்த பிருகு முனிவருக்குப் புலோமசை என்ற அழகு நங்கை பத்தினியாகக் கிடைக் கப்பெற்றாள். பிருகுமுனிவர் தனது பத்தினி புலோமசையுடன் காட்டில் தனியாகச் சென்று, தவஞ்செய்தார். தவஞ்செய்வதுடன், தர்மபத்தினியின் தனிமையையும் பூர்த்தி செய்துவந்தார். பதிசொல் தவறாத பத்தினி யாகையால், புலோமசையும் பிருகு இடும் கட்டளைப்படி நடந்துவந்தாள். பிருகுவின் தவம் வளர்ந்தது, புலோமசையின் வயிற்றில் கருவும் வளர்ந்தது.

ஒருநாள் மாலை பிருகு முனிவர், ஆசிரமத்தி லிருந்த அருமைப் பத்தினியைக் கூப்பிட்டு " பெண்ணே ! புலோமசையே ! நான் சந்தியா வந்தனஞ் செய்துவருகிறேன் ! அதற்குள் நீ யாகத்திற்கு வேண்டியவற்றை எடுத்து வைத்து, யாகத்தீயையும் மூட்டி வளர்ப்பா யாக !" என்று கட்டளையிட்டுச் சென்றார். கர்ப்பிணியாக இருந்த புலோமசையும், மிகச் சிரமத்துடன் எழுந்துவந்து, யாககுண்டத் தைத் தூய்மைப்படுத்தி, ஆகுதி, முதலியவற் றைச் சேகரித்து, தீயை மூட்டினாள். அக்னி பற்றி எரிந்துகொண்டிருந்தது. தீக்கு முன் னால் உட்கார்ந்து , புலோமசை அக்னியை வளர்த்துக்கொண்டிருந்தாள். அந்தச் சமயம் காட்டில் வேட்டையாடிச் சென்ற அரக்கன் ஒருவன், ஆசிரமத்தில் தனியேயிருந்த புலோ மசையைத் தூக்கிக்கொண்டுபோனான். புலோ மசை கூக்குரல்போட்டும், யாரும் அவளுடைய உதவிக்கு வரவில்லை. கடைசியாக, தாயின் அபயக்குரலைக்கேட்டு அவள் வயிற்றிலிருந்த குழந்தை வெளியேவந்து, தாயைக் கொடு மைப்படுத்தும் அரக்கனை எதிர்த்து, அழித்த தாம்.

ஆற்றங்கரைச் சென்ற பிருகு முனிவர் திரும்பிவந்தார். அழுது புலம்பிக்கொண்டிருந் தாள் புலோமசை, பக்கத்தில் சிரித்து விளை யாடிக்கொண்டிருந்தது குழந்தை. பத்தினி அழுவதன் காரணத்தை முனிபுங்கவரால் கண்டுகொள்ளமுடியவில்லை.

" தர்மபத்தினி ! ஏன் இப்படித் தலைவிரி

கோலமாக உட்கார்ந்திருக்கிறாய்?" என்று முனிவர் கேட்டார்.

"ஸ்வாமி! தாங்களில்லாதபொழுது, ஒரு அரக்கன் வந்து என்னைத் தூக்கிச்சென்றான்."

"உன்னையா? என் பத்தினியையா? பிரமாவின் மருமகளையா? எங்கே அந்த அரக்கன்? என் தவத்தை ஈடுவைத்துக் கடுமையான சாபந்தருகிறேன்!" என்று பிருகு கோபத்துடன் கூறினார்.

"அந்தத் துன்மார்க்கன் இறந்துவிட்டான்."

"எப்படி? உன் கற்புத்தன்மையே அவனைச் சுட்டெரித்திருக்கும்!"

"நம் குழந்தை! அவனைக் கொன்றுவிட்டான்!"

"குழந்தையா? பிறக்கும்பொழுதே சகல தபோபலத்துடன் பிறந்திருக்கிறது" என்று குழந்தையை எடுத்து பிருகு முனிவர் உச்சி மோந்துகொண்டார். "நல்லவேளை குழந்தை வந்து, உன்னைக் காப்பாற்றியது!"

"ஆமாம்! நான் எவ்வளவு கூச்சல் போட்டும் யாரும் உதவிக்கு வரவில்லை! சற்று தூரத்தில்தான் நீங்கள் இருந்தீர்கள்!"

"அப்பொழுது என் மனம் கடவுளை நினைத்து, உலகத்தை மறந்திருந்ததால், உன் குரல் என் காதில் விழுந்திருக்காது! மற்றவர்கள் யாருமே உன் அருகில், உன்னைக் காப்பாற்ற, இல்லையா?"

"இல்லையே, ஸ்வாமி! இந்தக் காட்டில் நாம் இருவர் மட்டும்தானே இருக்கிறோம்! இப்பொழுது மூன்றாவதாக, இந்தக் குமரன் தோன்றியிருக்கிறான்."

புலோமசை சொல்வதை பிருகுமுனிவர் ஏற்றுக்கொள்ளவில்லை. புலோமசையை அரக்கன் தூக்கிச்செல்ல முயன்றபொழுது அருகில் யார், யார் இருந்தார்கள் என்று முனிவர் தன் ஞானதிருட்டியின் மூலம் பார்த்தார்.

(தொடரும்)

பார்ப்பனரின் தனிக் குலவழக்கு

பார்ப்பனர் இப்போது நன்றாய்த் தமிழறிந்தவராகக் கருதப்படினும், வடமொழிப் பற்றுக் காரணமாக, இயன்றவரை வடசொற்களைக் கலந்து மணிப்பவள நடையிற் பேசுவதே வழக்கம். சாப்பாடு, காரணமாக, அடைமானம், தண்ணீர், திருவிழா, குடியிருப்பு, திருமணம் முதலிய சொற்களுக்குப் பதிலாக, முறையே போஜனம், வியாஜமாக, போக்கியம், தீர்த்தம், உத்சவம், வாசம், விவாகம் முதலிய சொற்களையே வழங்குவர்.

அம்மாமி, அம்மாஞ்சி (அம்மாள்சேய்), அத்திம்பேர் (அத்தியன்பர்) முதலிய முறைப்பெயர்வடிவங்களும், சாஸனம் (ஆவணம்), தீர்த்தம் முதலிய பொருட்பெயர்களும், அவா போய்ட்டா, நேக்கு பேட்டுண்டு சொல்றேள் (அவர்கள் போய்விட்டார்கள், எனக்கு போட்டுக்கொண்டு, சொல்கிறீர்கள்) என்பனபோன்ற கொச்சை வழக்கும், ஆடவர் பெண்டிருள் மூத்தாரையும் அடா என்று விளிப்பதும் பார்ப்பனத் தமிழ்ப் பேச்சிற்கு ஒரு தனித்தன்மை யூட்டுவனவாகும்.

பார்ப்பனர் சில தனிச் சொற்களால் தங்களையும் தங்கள் பொருள்களையும் பிரித்துக்காட்டுவதுமுண்டு.

மங்கலம், சதுர்வேதிமங்கலம்	—ஊர்
அக்கிரகாரம்	—குடியிருப்பு
பிரமஸ்ரீ	—அடைமொழி
பிரமதாயம்	—மானியம்
பிரமராயன்	—அரசப்பட்டம்
குமாரன்	—மகன்
பட்டவிருத்தி	—வேதங் கற்ற பார்ப்பனனுக்கு விட்ட இறையிலி நிலம்

—தேவநேயப் பாவாணர்.

காதலனுக்குப் பரிந்து பேசிய காதலி

[எழினி]

பொருளீட்டி வரும் பொருட்டு தலைவன் தலைவியை விட்டுப்பிரிந்து வேற்று நாட்டிற்குப் புறப்படுகிறான். அவன் இடையே பல மலைகளையும் மடுவுகளையும், காடுகளையும் கழனிகளையும், பாலை நிலங்களையும் பசும் புல்வெளிகளையும் கடந்துசெல்லவேண்டியவனாக இருக்கிறான்.

தலைவன் தாண்டிச்செல்லவேண்டிய இடங்களில் வேங்கடமலையும் அதனைச் சார்ந்த காடுகளும் சேர்ந்த இடம் ஒன்றாகும். வேங்கடமலையைப் புல்லி என்ற மாவீரன் தனக்கு உரிமையுள்ளதாகக்கொண்டு ஆண்டுவருகிறான். அவன் விரைந்து செல்லக்கூடிய வலிய குதிரைப்படையொன்றை வைத்துக்கொண்டு அதனைக் கட்டியாண்டுவருகிறான். அவனது வேங்கட மலை இயற்கைச்செழிப்பால் நிறைந்து காணப்படுகிறது. இதழ்கள் விரிந்து தலைகவிழ்ந்து காணப்படும் அழகுமிளிர்ந்த காந்தள் செடிகள், அம்மலையின் சாரல்களிலே செறிந்து கிடக்கின்றன. இவற்றைத்தவிர அவ்வேங்கட மலைச்சரிவில் யானைகள் ஏராளமாக உலாவுகின்றன. ஆண்யானையைப் பாம்புகடித்து கொன்றுவிட, அந்தத் துயரத்தைத் தாங்கிக்கொள்ள முடியாததாலும், பாம்பினைக் கண்டு அஞ்சுவதாலும் பெண்யானை பெருங்கூச்சலிட, அந்தக் கூச்சல் மலைப்பிளப்புகளில் சென்று தாக்கிட அது எதிரொலியாக மாறுகிறது. இப்படிப்பட்ட நலன்களெல்லாம் ஒருங்கே செறிந்த வேங்கடமலைக் காட்டினுள் நுழைந்து தலைவன் செல்லவேண்டியவனாக இருக்கிறான்.

ஒருநாள் தலைவியும் தோழியும் ஓரிடத்தில் உட்கார்ந்து, உரையாடிக்கொண்டிருக்கிறார்கள். தலைவி தலைவனது பிரிவாற்றாமையைக் கூறி வருந்திக்கொண்டிருக்கிறாள். தலைவன் இதுநேரம் எங்கு போய்க்கொண்டிருப்பானோ என்று இருவரும் கலந்து கற்பனை செய்து பார்க்கிறார்கள்.

தோழி : இதுநேரம் அவர் வேங்கடமலைக் காட்டிற்குள் நுழைந்திருப்பார் என்று நினைக்கிறேன்!

தலைவி : போடி, பைத்தியக்காரி! இப்பொழுது தானா அவர் நுழைந்திருப்பார்? முன்னமே நுழைந்து இந்நேரம் அவர் காட்டின் இடைப்பகுதியில் சென்றுகொண்டிருப்பார்! அவர் போய்தான் பலநாட்கள் ஆகிவிட்டனவே!

தோழி : அவரைப்போல் நெஞ்சழுத்தக்காரர் வேறு யாரும் இருக்கமுடியாது!

தலைவி : ஏண்டி, அப்படிக் கூறுகிறாய்?

தோழி : ஏண்டி என்றா என்னைக் கேட்கிறாய்? உன்னுடைய தோற்றமே அதனைத் தெளிவாகத் தெரிவிக்குமே!

தலைவி : என்னுடைய தோற்றத்திலே என்ன குறை?

தோழி : காதலர்மீது நீ கொண்ட காதல் உன் கண்களை மறைத்துவிட்டதோ? உன் உடல் அழகு எல்லாம் கெடும்படி பசலை நிறம் உடம்பெல்லாம் பரவியிருப்பதைப் பார்! உன்னுடைய உடம்பு மிகவும் இளைத்து நலங்கெட்டுக்கிடப்பதைக் காண்! இப்படிப்பட்ட கோலத்தில் உன்னை விட்டுவிட்டுச் சென்ற தன்மை இருக்கிறதே, அது போதாதா அவரின் நெஞ்சழுத்தத்தைச் சுட்டிக்காட்ட!

தலைவி : அவர்தான் என்ன செய்வாரடி? பொருள்தேட அவர் வெளிநாட்டுக்குச் செல்லவேண்டியிருக்கிறதே!

தோழி : உன்னோடு கூடியிருந்து உனக்கு இன்பங்கொடுக்காமல், உன்மீது அன்பு செலுத்தாமல், பொருள்மீது அன்பு கொண்டு அதனைத்தேடி, உன்னைக் கைவிட்டுச் சென்றுள்ளாரே, அது உனக்கு வருத்தத்தைக் கொடுக்கவில்லையா ?

தலைவி : என்னை அவர் கைவிட்டுவிட்டுச் சென்றதை நினைக்கும்போதெல்லாம் எனக்கு வருத்தமாகத்தானிருக்கிறது ! என்ன செய்வது ?

தோழி : உன் வருத்தம் கொஞ்சநஞ்சமாக இருந்தால் கவலைப்படவேண்டிய இன்றியமையாமை இருந்திருக்காது. அவரது பிரிவால் நீ வருந்தும் வருத்தம், ஊராருக்கெல்லாம் தெரிந்து, அவர்கள் இழித்தும் பழித்தும் கூறக்கூடிய அலராக மாறியிருக்கிறது ! இந்த நிலைமையை அவர் எண்ணிப்பார்க்கவேண்டாமா ?

தலைவி : அவர் எண்ணிப்பார்க்காமலா இருந்திருப்பார் ?

தோழி : அவர் எண்ணிப்பார்த்திருந்தால், உனக்கு இவ்வளவு அவதி ஏற்பட்டிருக்காதே ! அவருக்குத் தானாக அந்த நினைவு வராவிட்டாலும், அவர் செல்லும் காட்டில் காணப்படும் காட்சியே அவருக்கு அந்த எண்ணத்தை நினைவுபடுத்துமே ! ஆண்யானையைப் பிரிந்து வருந்தும் பெண்யானை போடும் கூச்சல் எப்படி மலைப்பிளவுதோறும் எதிரொலிக்கிறதோ, அப்படியே தம்மைப் பிரிந்து வருந்தும் தலைவியின் வருத்தம், ஊர் முழுதும் அலராக எதிரொலிக்குமே என்ற எண்ணம் அவருக்குத் தோன்றியிருக்கவேண்டுமே !

தலைவி : எனக்குப் பழிச்சொல் தோன்றும்படி காதலர் நடந்துகொள்கிறார் என்பது, எனக்கு மிக்க வருத்தத்தைத்தான் அளிக்கிறது. சோழன் கிள்ளிவளவன் சேரனது கழுமலம் என்ற ஊரைத் தாக்கி அதன் மதிற்சுவரையெல்லாம் இடித்து, அந்த ஊருக்கு நெருப்புவைத்தபோது எவ்வளவு பழிச்சொற்கள் கிளம்பினவோ அவற்றைவிட மிகவானப் பழிச்சொற்கள் என்னைப்பொறுத்துக் கிளம்பியிருக்கின்றன என்பதை நான் அறிவேன் ! அறிந்து என்னசெய்யமுடியும் ?

தோழி : தலைவரது செயலின் கொடுமையை நீ உணருகிறாய் ! ஆனால் அவரது குற்றத்தை ஒப்புக்கொள்ள மறுக்கிறாய் ! ஏடீ ! உன்னுடைய போக்கு வேடிக்கையாகவல்லவோ இருக்கின்றது !

தலைவி : அவர் என்னைக் கைவிட்டுப் போய்விட்டார் என்றாலும் எனக்குப் பழிச்சொல் உண்டாகும்படி நடந்துகொள்கிறார் என்றாலும் அவர் என்னிடத்து மிக்க நட்புடையவராக இருக்கிறார். அவர் குறித்த காலத்தில் வந்து என்னிடம் அன்புகாட்டுவார் என்ற உறுதிப்பாடு எனக்கிருக்கிறது. “ அவர் நீடு வாழ்வாராக !” என்றே இப்பொழுதும் நான் வாழ்த்துகிறேன் !

தோழி : நீ அவரை வாழ்த்திக்கொண்டே இங்கு இருக்கலாமடீ ! ஆனால் ஊரிலே அலர் பரவுகிறதே, அதற்கு என்னடி செய்யப் போகிறாய் ?

தலைவி : ஊரார் அலர் தூற்றினால் நன்றாகத் தூற்றிக்கொண்டு போகட்டும் ! அதைப் பற்றி எனக்குச் சிறிதும் கவலையில்லை ! காதலருடைய நட்புதான் எனக்குப் பெரிது : அவர் எப்படி நடந்துகொண்டாலும் அது அவரை விட்டு நீங்காது என்ற உறுதிப்பாடு எனக்குண்டு !

தலைவி தலைவனைப் பிரிந்து வருத்தத்தோடு இருந்தாலும் பெருமித உணர்ச்சி குன்றாமல் இருக்கிறாள் என்பது தோழிக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

∴ ∴ ∴

இது **நற்றிணை 14**-ஆம் செய்யுட் கருத்தைத் தழுவி எழுதப்பட்ட காதற்காட்சியாகும். இதனை இயற்றியவர் **மாமூலனார்** என்ற புலவர் ஆவார். இவருடைய பாடல்களில் வரலாற்றுக் கருத்துக்கள் மிகுந்துக் காணப்படுவதால் இவரை ஒரு வரலாற்றாசிரியர் என்று கூறுவது தகும். இவருடைய பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய நூல்களில் காணக்கிடக்கின்றன.

தொல்கவின் தொலையத் தோள்நலஞ் சாஅய்
நல்கார் நீத்தனர் ஆயினும் நல்குவர்
நட்டனர் வாழி தோழி குட்டுவன்

அகப்பா அழிய நூறிச் செம்பியன்
பகல்தீ வேட்ட ஞாட்பினும் மிகப்பெரி(து)
அலரெழச் சென்றனர் ஆயினும் மலர்கவிந்து
மாமடல் அவிழ்ந்த காந்தளஞ் சாரலின்
ஞால்வாய்க் களிறு பாந்தள் பட்டெனத்
துஞ்சாத் துயரத்(து) அஞ்சுபிடிப் பூசல்
நெடுவரை விடரகத்(து) இயம்பும்
கடுமான் புல்லிய காடிறந் தோரே.

[நற்றிணை-14]

[தோழி! மலர்கவிந்து அவிழ்ந்த சாரலில், பிடிப்பூசல் இயம்பும் காடு இறந்தோர் தோள்நலஞ் சாஅய்த்தொலைய நீத்தனராயினும், சென்றனராயினும், நட்டனர் நல்குவர், வாழி! என்று கொண்டு கூட்டுக.

பொழிப்புரை : தோழீ! மலர் தலைகவிழ்ந்து பெரிய இதழ் விரிந்த காந்தள் செடிகளையுடைய சாரலின்கண்ணே, தொங்குகின்ற வாயையுடைய ஆண்யானை பெரும்பாம்பின் வாயிலகப்பட்டு மடிய, தணியாத துயரத்தொடு மிக்க அச்சங்கொண்ட பெண்யானை பிளிறும் பெரிய ஒலியானது நீண்ட மலையிடத்திலுள்ள பிளவுகளிடத்தே சென்று எதிரொலி கிளப்பும்படியிருக்கும்; விரைந்து செல்லக்கூடிய குதிரையையுடைய கள்வர் கோமானான புல்லி என்பவனுடைய வேங்கட மலையிலுள்ள காட்டின் கண்ணே சென்ற நம் காதலர், என் தோளின் அழகு கெட்டு வாடிப் பழைய நலனெல்லாம் தொலையுமாறு, என்னைக்கூடி இன்பங்கொடுக்காதவராய்க் கைவிட்டுப் போய்விட்டார் என்று நீ கூறுகின்றாய்; அப்படிக் கைவிட்டுவிட்டுப் போய்விட்டாரென்றாலும், அவர் சேரனது கழுமலம் என்ற ஊரின்கண்ணே உள்ள மதிற்சுவர்கள் ஒருமிக்க அழிய அவற்றை இடித்து அழித்துக் கிள்ளிவளவன் அன்றையப் பகலிலேயே அவ்வூரைத் தீக்கிரையாக்கிய போரைக்காட்டிலும் மிகப்பெரிதாகிய பழிச்சொல்லுண்டாகும்படி சென்றார் என்றாலும், என்னிடத்து மிக்க நட்புடையவராதலால், குறித்த பருவக்காலத்தே வந்து அன்புகாட்டுவார்; ஆதலால் அவர் நீடு வாழ்வாராக!

தோள்நலம் சாஅய் - உடம்பு மிகவும் சுருங்குதல்; நல்கார் - (இன்பம்) கொடுக்காதவராய்; நல்குவர் - (இன்பம்) கொடுப்பர்; குட்டுவன் - சேரன்; அகப்பா - மதில்; நூறி - அழித்து; செம்பியன் - சோழன்; அதாவது கிள்ளிவளவன்; ஞாட்பு - போர்; அலர் - பழிச்சொல்; ஞால் - தொங்குகின்ற; பாந்தள் - பாம்பு; களிறு - ஆண்யானை; பிடி - பெண்யானை; பூசல் - கூச்சல்; வரை - மலை; விடர் - மலைப்பிளவு; கடுமான் - விரைவாகச் செல்லும் குதிரை.]

ஃ ஃ ஃ

லைவி, தன் காதலன் மாட்டுத், தான் ண்டிருக்கும் அளவுகடந்த காதலன்பின் னாக, அவன் கொடுமை புரிந்துள்ளான் லும், அவனைத் தோழிக்குக் காட்டிக் டுக்க மனமில்லாமல், அவன் சார்பாகவே , அவனது நட்பைப் பாராட்டிப் பேசும் மை மிகச் சிறந்த பண்பாகும். தலைவியின் நல்ல உள்ளத்தின் மேம்பாட்டை இச்செய்யுள் அழகுற எடுத்துக்காட்டுகிறது.

புல்லி என்ற மாவீரன் வேங்கடமலைக்கு உரிமையுடையவனாக இருந்தான் என்ற வரலாற்றுக் குறிப்பினையும், சோழன் கிள்ளிவளவன் சேரனோடு போரிட்டு அவனது கழுமலம் என்ற ஊரினது மதிற் சுவர்களை அழித்து அவ்வூருக்குப் பட்டப்பகலிலே நெருப்புவைத்

தான் என்ற வரலாற்றுக் குறிப்பினையும் மாமூலனார் இச்செய்யுளின் மூலம் அறிவிக்கிறார். மாமூலனார், புல்லி கிள்ளிவளவன் ஆகியோரால் ஆதரிக்கப்பட்ட புலவராக இருந்திருக்கக்கூடும் என்று எண்ணுவதற்கு இடமிருக்கிறது. எனவேதான் புல்லியின் செல்வச் சிறப்பையும், கிள்ளிவளவனின் வென்றிச் சிறப்பையும் பாராட்டிப் பேசுகிறார் புலவர் என்னலாம்.

கவலையுற்று வருந்துவதால் அழகு கெட்டு உடல் மெலிதல், மலர்கவிந்து மடல் விரிந்த காந்தள் செடிகள் மலைச்சாரலில் இருத்தல், யானையைப் பாம்பு கடித்தல், அதற்காகப் பெண் யானை கதறிக் கூச்சலிடுதல், கூச்ச மலைப்பிளவுகளில் சென்று பட்டு எதிரொலி தல் போன்ற உண்மைகள் இச்செய்யுளி மூலம் உணர்த்தப்படுகின்றன.

ஆண்யானையைப் பிரிந்து பெண்யானை போடும் கூச்சல் மலைப்பிளவுகளிலெல்லாம் எதிரொலிக்கும் என்பது, தலைவனைப் பிரிந்து தலைவி வருந்தும் வருத்தம் ஊர் முழுவதும் அலராக மாறுகிறது என்பதற்கு உள்ளுறை உவமம் ஆகும். அலர் என்பது பழிச்சொ லைக் குசுகுசுவென்று ஒருவர் மற்றொருவரிட பரிமாறுவது.

வியப்புக்குரிய விரல்முனைகள்

அழுத்தம் (Pressure) ஏற்படும்போது கைவிரல் முனைகளைப்போல் மிக்க உணர்ச்சிவயப்படும் உடலுறுப்பு வேறொன்றும் அவ்வளவாக இல்லை என்று கூறலாம். ஆனால் அதே வேளையில் வெளித் தாக்குதலால் ஏற்படும் வலியைத் (Pain) தாங்கக்கூடியவைகளாய் அதாவது வலியைப்பொறுத்து உணர்ச்சி குறைந்தவைகளாய்க் காணப்படும் உடலுறுப்புகள் வேறொன்றும் அவ்வளவாக இல்லை என்று சொல்லலாம். அழுத்தத்தை மிக்க உணர்ச்சியோடு ஏற்பதும் வலியைக் குறைந்த உணர்ச்சியில் தாங்குவதும் ஆன வியப்புக்குரிய தன்மைகள் கைவிரல் முனைக்கு அமைந்திருக்கின்றன.

ஐந்திலே ஒரு பகுதி (1/5) குண்டுமணி எடை அழுத்தத்தைக் கொண்டு கண்ணில் ஏற்படுத்தப்படும் வலியைப்போல், அதே அளவில் விரல்முனையில் ஏற்படுத்தவேண்டுமானால், 300 குண்டுமணி எடை அழுத்தம் தேவைப்படும். அதாவது விரல் முனை கண்ணைபோல் 1500 மடங்கு மிகவாக வலிதாங்கும் ஆற்றல் படைத்ததாக இருக்கிறது. ஆனால் உணர்ச்சி வயப்படுவதில் கண்ணைவிட விரல்முனை குறைந்த அளவு அழுத்தத்திலேயே பெற்றுவிடுவதாக அமைந்திருக்கிறது. விரல்முனையைக்காட்டிலும் அழுத்தத்திற்குச் சற்று மிகவாக உணர்ச்சிவயப்படுவது நாக்கு மு ஒன்றுதான். மூன்று குண்டுமணி எ அழுத்தத்தால் விரல்முனையில் ஏற்ப உணர்ச்சி, இரண்டு குண்டுமணி எடை அ தத்தினாலேயே நாக்குமுனையில் ஏற்பட்டு கிறது.

300 குண்டுமணி எடை அழுத்தம் கைவி முனையில் ஏற்படுத்தும் அளவு வலியை, வ றிலும், முதுகிலும் ஏற்படுத்தவேண்டுமா 20 குண்டுமணி அழுத்தமும், 100 குண்டும அழுத்தமும் முறையே போதுமானவையாகு

காலடியின் தோல்பகுதி அழுத்தம் வ ஆகிய இரண்டைப் பொறுத்தும் குறை அளவு உணர்ச்சி பெறுவதாகத்தானிருக்

உணர்ச்சி மிக்கதாய், வலி தாங்குவத உள்ள நேர்மாறான இருவேறு தன்மைக கொண்டிருப்பன, கைவிரல்முனைகளேயாகு

இந்த உண்மையை அமெரிக்க அறிஞர் வெசுலி இ. உட்சன் (Wesley E. Woods என்பவர், தாம் எழுதியுள்ள "மனிதப் பெ யியல் வழிகாட்டி" (Human Engineering Gu என்ற நூலில் தெளிவுபட விளக்கிக்கா யுள்ளார். இந்த நூல் கலிபோர்னியா பல்க கழகத்தால் வெளியிடப்பட்டிருக்கிறது.

கையெழுத்து வேட்டை

[பரணன்]

பெயரும் புகழும் பெற்றவர்களின் கையெழுத்துக்களை, அவர்கள் கைப்படவே எழுதி வாங்கி, அவைகளை வரிசைப்பட திரட்டி வைத்துக்கொள்வது என்னும் பழக்கம் உலகு எங்கணும் இருந்துவருகிறது. அந்தப் பழக்கம் நமது நாட்டில் மாணவர்கள்—இளைஞர்கள் ஆகியோரிடையே அவர்களை ஆட்டிப்படைக்கும் ஒரு பெரிய தொத்துநோயாகப் பரவியிருக்கிறது.

ஏதேனும் ஒரு துறையில் பெயரை நிலைநாட்டிப், பொதுமக்களிடையே அதன்மூலம் தொடர்பு பூண்டு, பிறரால் போற்றப்படும் புகழுக்குரியோராக இருப்பவரின் கையெழுத்துக்களை வாங்குவதிலே பெரும்பாலும் மாணவர்களும் இளைஞர்களும் தணியா ஆர்வங் காட்டுகின்றனர். இது மேலை நாடுகளிலிருந்து நமது நாட்டிற்குள் புகுந்த பழக்கமாகும். மேலை நாட்டினர் பலநூற்றுண்டுகளுக்கு முன்பிருந்தே புகழுடையோரின் கையெழுத்துக்களை வாங்கும் பழக்கத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

பொதுவாகப் பொதுமக்களோடு தொடர்பு பூண்டு, பொதுமக்களின் உள்ளத்தைத் தம்பால் கவரும் வாய்ப்புடையோரே கையெழுத்து வேட்டைக்குரியவராக இருந்துவருகின்றனர். ஆட்சித்தலைவர்கள், அரசியல் அறிஞர்கள், அரசியல் கட்சித்தலைவர்கள், சொற்பொழிவாளர்கள், எழுத்தாளர்கள், நாடக நடிகர்கள், திரைப்பட நடிகர்கள், இசைவாணர்கள், கலைவாணர்கள், ஓவிய நிபுணர்கள், சிற்பிகள், உடற்பயிற்சியாளர்கள், பந்தயவிளையாட்டுக்காரர்கள் போன்றவர்களில், தங்களுக்கு விருப்பமான சிறப்புக்குரியவரின் கையெழுத்தைப் பெறுவதில், இளைஞர்கள் மிக்க ஆர்வங் காட்டுகின்றனர்.

கையெழுத்துக்களை வாங்குவதால் ஏற்படும் பலன் என்ன? கையெழுத்து வாங்குவோர், புகழுக்குரியவர்களைத் தாமே நேரில் காண்கிறோம் என்று எண்ணி ஒருவகைப் பெருமிதவுணர்ச்சி கொள்கிறார்கள். புகழுக்குரியோர் ஒவ்வொருவரின் கையெழுத்து எப்படியிருக்கிறது என்று பார்ப்பதிலே ஒருவகை வியப்புணர்ச்சி ஏற்படுகிறது. புகழுக்குரியோரையும் அவர்களோடு ஏற்படுத்திக்கொண்ட சந்திப்பையும் நினைவுபடுத்திப் பார்த்து மகிழ்கிறார்கள். மேற்கண்ட இன்ப நிலைகளைத்தர, கையெழுத்துக்கள் பெரிதும் பயன்படுவதால்தான், அவற்றின் வேட்டையில் இளைஞர்கள் இறங்குகிறார்கள்.

கையெழுத்து சிலவேளைகளில் அதனைத் திரட்டிவைத்திருப்பவருக்குப் பெரும்பொருள் ஈட்டித்தருவதாகவும் அமைந்துவிடுவதுண்டு. புகழுக்குரியோரின் புகழ் மேலும் மேலும் வளர்ந்துகொண்டு போகும்போதும், புகழுக்குரியோர் மறைந்து நீண்டகாலம் ஆகும்போதும் அவர்களின் கையெழுத்து, பலரால் விரும்பப்பட்டு மிக்க விலைமதிப்புடையதாக ஆகிவிடக்கூடும். மிகச்சிறந்த புகழுடையோரின் கையெழுத்துக்களை விற்று அதன்மூலம் பெரும்பொருள் திரட்டலாம் என்று எண்ணுவோர், பொருள்—நேரம்—திறமை ஆகியவற்றைச் செலவழித்து மிகுபுகழுக்குரிய இறந்தவர்கள்—இருப்பவர்கள் ஆகியோரின் கையெழுத்துக்களைத் திரட்டுகின்றனர்; மிக்க விலைக்கு விற்கின்றனர்.

சிலபொழுது நண்பர்களின் நினைவின் அறிகுறியாக அவர்களின் கையெழுத்துக்களை வாங்கி அவற்றை வைத்துப் பாதுகாத்துக் கொண்டுவருதலும் உண்டு.

ஆங்கில நாட்டில் நாடகப்பெரும்புலவராக விளங்கிய வில்லியம் செகப்பிரியரின் (William Shakespeare) கையெழுத்து விலை மதிக்கவொண்ணாத ஒன்றாக இருக்கிறது. செகப்பிரியரின் கையெழுத்தோடுகூடிய முடங்கல்கள் மூன்றே மூன்றுதான் கிடைக்கப்பெற்றிருக்கின்றன என்றும், அந்த மூன்றின் விலை ரூ. 20,00,000 (இருபது இலட்சம்) ஆகும் என்றும் நிபுணர்கள் அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

அமெரிக்காவின் மிகச்சிறந்த சிறுகதை எழுத்தாளரான எட்கார் ஆலன் போவின் (Edgar Allen Poe) கையெழுத்துக்கள் மிகச் சொற்பமாகத்தான் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. அவருடைய கையெழுத்து ஒவ்வொன்றும் ரூ. 13,000 விலைமதிப்புடையது என்று கூறுகின்றனர்.

சிறந்த புகழுடையவர்களில் யாருடைய கையெழுத்துகள் மிகச்சொற்பமாக இருக்கின்றனவோ அவர்களுடைய கையெழுத்துதான் மிக்க விலைக்குப் போகக்கூடியதாக இருக்கும். வள்ளுவர், இளங்கோ, கம்பன், காளிதாசன் போன்றவர்களின் கையெழுத்து இப்பொழுது ஒன்றிரண்டு கிடைக்கப்பெறுமேயானால், அவை விலைமதிக்கவொண்ணாதவைகளாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. சாதாரணமாக அரசியல் தலைவர்கள், திரைப்பட நடிகர்கள் ஆகியவர்களின் கையெழுத்தைக் காட்டிலும், பழங்கால இற்றைக்கால இலக்கியப் பேரறிஞர்களின் கையெழுத்துக்கள் மிக்க வருவாய் தேடித்தருவனவாக இருக்கின்றன, அரசியல் தலைவர்கள், ஆட்சித் தலைவர்கள் ஆகியோரின் கையெழுத்துக்கள் பல்வேறு தாள்களிலும் காணப்படுபவையாக இருப்பதால், அவை அவ்வளவு மிகவாக விலைக்குப் போவதில்லை; குறைந்த விலைக்குத்தான் போகின்றன.

அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக இருந்த உட்ரோ வில்சனைப்பற்றி ஒரு நிகழ்ச்சி கூறப்படுவதுண்டு. அமெரிக்கப் பல்கலைக் கழகம் ஒன்றில் அவர் விரிவுரையாளராக இருந்தபோது, அவரிடம் ஒரு மாணவன் கையெழுத்துபோட்டுத்தரும்படி கேட்டானாம். உடனே அவர் கையெழுத்து போட்டுக் கொடுத்துவிட்டு, இந்தக் கையெழுத்து வாங்குவதற்காகச் செலவழிக்கும் நேரத்தை வேறு நல்ல வழிகளில் செலவிட்டால், அது எவ்வளவோ இலாபகரமாக இருக்கும் என்று கூறினாராம். ஆனால் அப்பொழுது அந்த மாணவனோ அல்லது உட்ரோ வில்சனோ அவர் குடியரசுத் தலைவராகப் பிற்காலத்தில் வருவார் என்பதை எதிர்பார்க்கவில்லை. அந்தக் கையெழுத்து அந்த மாணவனுக்குப் பிற்காலத்தில் ரூ. 450 தேடித்தரும் என்பதை அவன் அப்பொழுது எதிர்பார்க்கவில்லை.

கையெழுத்து வேட்டையில் ஈடுபடும் சிலர், சில குறிப்பிட்ட துறையில் மட்டும், குறிப்பிட்ட முறையில் முழு சிந்தனையையும், விடா முயற்சியையும் பயன்படுத்திக், கையெழுத்துக்களைத் திரட்டுகின்றனர். தென் ஆப்பிரிக்காவில் வாழ்ந்த சி. டபிள்யூ. மோர்சு என்பவர் 'விக்டோரியா கிராசு' (Victoria Cross) என்ற உயர்தரப் பதக்கம் பெற்றவர்களின் கையெழுத்துப் போடப்பட்ட நிழற்படங்களை மட்டும் திரட்டுவது என்று முற்பட்டு, அப்படிப்பட்ட பதக்கம்பெற்ற சுமார் 3000-க்கு மேற்பட்டவர்களுக்கு மடங்கல் வரைந்தார். சுமார் 450 பேர்கள் தங்கள் கையெழுத்தோடு கூடிய படங்களை அவருக்கு அனுப்பிவைத்தனர். கடைசி உலகப் பெரும்போரின்போது அத்தகைய பதக்கம் பெற்றவர்களான மேற்கொண்டு இருபது பேர்களின் படங்களையும் அவர் பெற்றுத் தம் சேமிப்பில் சேர்த்துக் கொண்டார். இப்படி ஒரு குறிப்பிட்ட துறையையே முக்கியமாகக் கருதி, கையெழுத்துக்களைச் சேர்த்துவைத்து மகிழ்வோரும் உண்டு.

பிரிட்டனின் பிரதமராக இருந்து விலகிய சர்ச்சிலின் கையெழுத்து ஒன்று, இப்பொழுது ரூ. 15 அளவுக்கு விலைகொடுக்கப்படுகிறது. அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக விளங்கும் ஐசனோவரின் கையெடுத்து மிகச் சொற்பமான அளவிலேதான் கிடைக்கப்பெறுவதால், அதுவும் விலைமதிப்பு உள்ள ஒன்றாகக் கருதப்படுகின்றது. அவர் குடியரசுத் தலைவராக வருவதற்கு முன்னால் அவர் ஒரு படைவீரராகவும், படைத்தலைவராகவும் இருந்ததால், அவருடைய கையெழுத்தைப் பெற்றுவைத்திருப்போரின் எண்ணிக்கை மிகக்குறைவாக இருக்கிறது.

காலஞ்சென்ற பேரறிஞர் பெர்னாட்சா, தம்முடைய கையெழுத்து ஒன்றுக்கு ரூ 325 கொடுப்பவர்க்கே கையெழுத்து போட்டுத்தருவது வழக்கம். உலக உத்தமர் காந்தியார் தம்முடைய கையெழுத்து ஒன்றுக்கு ரூ. 5 பெற்றுவந்தார். இப்பொழுது பெரியார் இராமசாமி அவர்கள் கையெழுத்து ஒன்றுக்கு அணா நான்கும் சிலபொழுது ரூ. 1-ம் பெற்று வருகிறார்கள்.

பெர்னாட்சா அறிவு மேம்பாட்டிற்கும் நகைச்சுவைக்கும், நயம்பாடான உரைக்கும் பேர்போனவர். அவர் ஒரு முறை ஒருவருக்கு 200 பவுன் கொடுக்கவேண்டியிருந்ததாம். அதற்காக இருபது இருபது பவுன்களாகப் பத்துச் 'செக்'குகள் எழுதிக்கொடுத்தாராம். 200 பவுனுக்கும் ஏன் ஒரே 'செக்'காகக் கொடுக்கவில்லை என்று மற்றவர் கேட்டபோது, பெர்னாட்சா, பத்துச் 'செக்'குகள்

...துவதன் மூலம் மற்றவருக்கு 50 பவுன் ...வரும் என்றும், தமக்கு 200 பவுன் மிச்சம் ...றும் கூறினாராம். எப்படி என்று மற்றவர் ...டாராம். தம்முடைய கையெழுத்து ஒவ் ...ன்றும் 25 பவுன் பெறும் என்றும், தம் ...டைய பத்துச் 'செக்'குகளையும் மற்றவர் ...று பலர்க்கு விற்றால் அதன்மூலம் 250 ...ன் மற்றவருக்குக் கிடைக்கும் என்றும், ...யெழுத்துக்காகச் 'செக்'குகளைப் பெறு ...ர் அவற்றைப் பவுன்களாக மாற்றாமல் ...படியே வைத்துக் காப்பாற்றுவார்களாத ..., தமக்கு 200 பவுன் பாங்கியில் குறையாம ...க்கும் என்றும் கூறினாராம். கையெழுத்து ...ஷாவிடம் அவ்வளவு மதிப்பு வாய்ந்த ... இருந்துவந்தது.

...மது நாட்டில் கையெழுத்துக்களைப் பெரும் ...க்கு விற்கிற நிலைமை இன்னும் சரியான ... வரவில்லை. ஆனால் கையெழுத்து ...ட்டைபுரிய கிளம்பியிருக்கும் இளைஞர்கள், ...னவர்கள் எண்ணிக்கை மட்டும் கணக்கற ... பெருகிவிட்டது. மிகப் புகழ்வாய்ந்த ...யவர்களின் கையெழுத்துகூட சாதாரண ...ரவர்களின் கையெழுத்துக்களோடு கலந்து ...க்கும்படியான நிலைமை ஏற்பட்டுவிடுவ ...டு. காலம் செல்லச் செல்ல ஒருகாலத் ... மிகச்சிறந்தவர்களின் கையெழுத்துக்கு ...மதிப்பு கூடுதலாக ஏறிநிற்கும்.

...கயெழுத்து வாங்குவோர் வேட்டையில் ...டும்போது, வேட்டைக்கு இரையாவோர், ...பொழுது தவறுதலான ஏடுகளிலும் ...யெழுத்து போட்டுவிடும்படியான நிலைமை ...பட்டுவிடும். பிரிம்மோ கார்னெரா என்ற ...துச்சண்டைக்காரர், ஒன்றும் எழுதாத ...செக்'கில் (Blank cheque) கையெழுத்துப் ...ட்டுக்கொடுக்க, அதனால் அவர் பிற்பாடு ...வருக்கு ரூ. 60,000 கொடுக்கவேண்டி ...ட்டதாம். கையெழுத்திடுவோரைக் கட் ...டுத்தும்படியாகத் தாள்களில் ஏதேதோ ...தி சிலர் கையெழுத்து வாங்கிவிடுவ ...டு. கையெழுத்துப் போடுவோர் அவ ...தில் ஏதொன்றையும் பார்க்காமல் போட்டு ...வார்கள். இதனால் கையெழுத்திடுவோர்க் ...பல அவதிகள் ஏற்பட்டுவிடும். எனவே தான் கையெழுத்திடுவோர் கையெழுத்திடுவதில் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டியவர்களாவார்கள்.

கையெழுத்து வேட்டையில் ஈடுபடுவோர் எவ்வளவு விடாமுயற்சியுடன் இதுநாளில் வெறிபிடித்து அலைகிறார்கள் என்பதை ஒரு இதழ் நகைச்சுவைப் படம் ஒன்றின் மூலமாக வரைந்துகாட்டியிருந்தது. கம்பியின் மீது நடந்துகாட்டும் ஒரு புகழ்வாய்ந்த சர்க்கசுக்காரியிடம் ஒரு இளைஞன் கையெழுத்துவாங்க விரும்புகிறான். சர்க்கசுக்காரி கையிலே குடையேந்திக் கம்பியில் நடந்துகாட்டுகிறாள். அந்த இளைஞன் அவள் பின்னால் குடையேதும் இல்லாமல், கையெழுத்துப் புத்தகத்துடன் கம்பியின்மீது நடந்து அவளிடம் கையெழுத்து வாங்கச் செல்கிறான். அதாவது அவளிடம் கையெழுத்து வாங்கவேண்டும் என்ற ஆவல், அவனைக் குடையில்லாமலேயே கம்பியின்மீது நடக்கச் செய்கிறது என்பதுதான் அறிந்து மகிழ்வதற்குரியதாகக் காட்டப்பட்டிருப்பதாகும்.

அமெரிக்காவில் அகராதி ஒன்று உருவாக்கும்பொருட்டு, சுமார் 25000-க்கு மேற்பட்ட அறிஞர்களுக்கு முடங்கல்கள் எழுதிச் செய்திகள் திரட்டினார்களாம். பலரும் விளக்கங்கள் எழுதினார்கள். புகழ்பெற்ற பலரின் கையெழுத்துக்களோடு கூடிய விளக்கத்தாள்கள் பலப்பல அவற்றில் இருந்தனவாம். அகராதி வேலை முடிந்தபிறகு அந்தத் தாள்களையெல்லாம் பழங்காகிதக்காரனிடம் போட்டுவிட்டார்களாம். மிசு. ஏ. சே. பென்சமின் என்ற அமெரிக்க மங்கை, அந்தத் தாள்களெல்லாம் காகிதக்கூழாவதற்கு முன்பு, அவைகளைக் குறைந்த விலை கொடுத்து வாங்கிப், பின்பு விற்பனை செய்தாளாம். அவற்றில் காணப்பட்ட கையெழுத்து ஒவ்வொன்றும் ரூ. 500-க்கு மேலாக விலைபோயிற்றே ஒழிய, ஒன்றுகூடக் குறைவாகப் போகவில்லையாம்.

கையெழுத்து வேட்டை சிலர்க்குச் சிலபொழுது நல்ல பலனளிக்கத்தான் செய்கின்றது!

இளவேனில்

[செல்வன்]

அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு வந்த ஏகாம்பரத்தின் முகத்தில் என்றுமில்லாத சோர்வு கப்பியிருந்தது. வழக்கம்போல் வசந்தா ஏகாம்பரத்தின் 'கோட்டைக் கழற்றி மாட்டிவிட்டு, வேறு உடைகளும் முகம்கழுவத் தண்ணீரும் கொண்டுவந்தாள். வசந்தாவின் செய்கைகளையும் அவளையும், மாறிமாறிப் பார்த்துக்கொண்டிருந்தான் ஏகாம்பரம். கையில் காப்பியுடன் சமையல்கட்டிலிருந்து வந்த வசந்தாவுக்குத் தன்கணவன் ஏதோ சிந்தனையில் சிக்கித் தவிப்பது தெரிந்தது. அலுவலதிகமாக இருக்கலாம் என நினைத்து காப்பியைக் கணவனிடம் கொடுத்துவிட்டு, "என்ன அத்தான்! மிகவும் சோர்வாகக் காணப்படுகிறீர்களே! வேலை அதிகமா? பேசாமல் ஒருமாதம் லீவு போட்டுவிட்டு எங்காவது குற்றாலம், கோடைக்கானல் என்று போய்விடலாம் என்றாலும் கேட்கமாட்டேன் என்கிறீர்கள். கோடை கொளுத்துது. பாய்லர்ல போட்டு எடுக்கிற மாதிரி இருக்கு உடம்பெல்லாம்" என்றாள்.

"ஏழுநாளைக்கொருதரமாவது எண்ணெய் தேய்த்துக் குளிச்சாத்தானே! தனக்கும் தெரிவதில்லை; சொன்னாலும் கேட்கிறதில்ல" என்று அன்போடு கடிந்துகொண்டாள் அப்பொழுதுதான் அங்குவந்த ஏகாம்பரத்தின் தாய் தாயாரம்மாள் வசந்தாவின் கேள்விக்கும் 'தன்தாயின் கேள்விக்கும் என்ன பதில் சொல்வது என்றே புரியவில்லை ஏகாம்பரத்துக்கு.

கோட்டுப் பையிலிருந்து தன்னை மதுரைக்கு மாற்றியிருக்கும் கடிதத்தை எடுத்து வசந்தாவிடம் காண்பித்தான். மாற்றல் தற்காலிகமாகத்தான். அதுவும் ஆறு மாதத்திற்கு. "இதற்காகத்தானா அத்தான் இவ்வளவு கவலை. ஆறுமாதத்திற்குத்தானே. அதற்கப்புறம்தான் இங்கேயே வந்துவிடுவீர்கள் அல்லவா?" என்றாள் வசந்தா. ஏகாம்பரத்தின் நினைவில் சென்றகால நிகழ்ச்சிகள் நிழலாடத் தொடங்கின. வசந்தா அவனுக்குப் பள்ளிப் பருவத்திலேயே அறிமுகமானவள்தா... பள்ளிப்பருவம் முடிந்து கல்லூரியில் கால... எடுத்துவைத்தபிறகுதான் அவர்களிருவரி... அறிமுகம் காதல் மலர்வதற்கு வழி வ... தது. கல்லூரிப்படிப்பு முடிந்தது சென்னையி... நீண்டநாள் வேட்டை, பிரமுகர்களின் பெரி... தொழிலதிபர்களின், "இப்பொழுது இ... மில்லை. பார்க்கலாம்" என்ற வழக்கமா... பதில் இவற்றிற்கு இடையே வாழ்க்கை... லேயே அவனுக்கு ஒரு சலிப்பு, அ... தொடர்ந்து கொஞ்சம் நம்பிக்கை, 'நமக்... ஒரு வேலை கிடைக்காமலா போய்வி... என்று. இவற்றிற்குப் பிறகு அரக்கோண... தில் ஒரு பாங்கியில் வேலை கிடைத்த... அதன்பிறகு ஏகாம்பரம், வசந்தா திரும... மும் வழக்கமாக காதல் திருமணத்திற்கு ஏ... படும் இடையூறுகளுக்கு எதிராக நடந்தே... யது. திருமணமாகி ஓராண்டு முடிந்த... அவர்கள் இன்பத்தின் எதிரொலிதா... சேகர். கன்னங்கறிய சுருட்டை மயிர் நெற்... யில் அசைந்தாட, 'அப்பா! அப்பா!' என்... தத்தித்தத்தி, தளிர்நடை போட்டுவரும் த... மகனைக்கண்டு பூரித்துப்போவான் ஏகாம்ப... விளையாட்டுப்போல ஒன்றறை ஆண்டுக... ஓடிவிட்டன. ஒருவாரம்கூட சேர்ந்தாற்போ... பிரிந்திருந்தது கிடையாது. ஆறுமாதம்,... வாரம். 168 நாட்கள்! ஏகாம்பரத்திற்கு ஒ... றுமே புரியவில்லை. மதுரைப் பயணம் வே... டாம் என்று மறுத்துச் சொல்லவும் முடியா... பாங்கு அதிபர் நேரடியாகக் கூப்பிட்டு ... கணக்குகளை ஒழுங்குபண்ணுவதற்காக ஏகா... பரத்தை 'ஸ்பெஷலாக' அனுப்பியிருக்கிறா...

விடிந்தால் மதுரைப் பயணம். வசந்தா வ... கம்போல் இரவு சாப்பாட்டிற்குப்பிறகு அ... களையெல்லாம் கழுவிச் சுத்தம் செய்துவி... வெற்றிலைத் தட்டு, பால் இவற்றுடன் அத்... னிடம் வந்தாள். ஆறுமாதம்தானே, அ... தான் ஏன் இவ்வளவு சிரமப்படவேண்... என்பது புரியவில்லை அவளுக்கு. அவளு... என்ன, அடுக்களை, அழுப்குழந்தை, அடு...

வீட்டு அகல்யா, எதிர்வீட்டு யேசுமணி இவர்களுடன் பொழுதுபோய்விடும். ஆனால் ஏகாம்பரத்திற்கு அலுவலகத்திலிருந்து வீடு திரும்பியதும் இன்னும் ஆறுமாதத்திற்கு தன் அருமைச் செல்வனைக் காணமுடியாது. சட்டைக் கழற்றி வைத்துவிட்டு, "கை, கால் அலம்பிக்கொள்ளுங்கள், காப்பி கொண்டு வருகிறேன்" என்று அன்பு ததும்பக்கூறி வரவேற்கும் வசந்தாவைப் பார்க்கமுடியாது. தன் குடித்தனத்துடன் மதுரைக்குச் சென்றுவிடலாம் என்று நினைத்தான். ஆறுமாதத்திற்காக அப்படிச் செல்வது பொருள்விரயம் தான். மேலும் வீடுதேடிக் குடித்தனத்தை அமைப்பதிலேயே பாதிப்பொழுது கழிந்துவிடும் ஆதலால் அந்த நினைவைக் கைவிட்டான். வழக்கமாக பேசும் பேச்சுக்கள்கூடத் தடைப்பட்டன. பிரிகின்றோம் என்ற எண்ணம் ஏகாம்பரத்துக்கு. அத்தான் இவ்வளவு கவலைப்படுகிறாரே என்ற பரிவு வசந்தாவுக்கு. இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டிருந்தனர். ஏகாம்பரத்துக்கு நினைவுகள், தன் அலுவலகம், அதன் அதிபர், துரைக்கிளை, அங்கு நடந்த ஒழுங்கின்மை, தற்காலிகமாற்றம் இதைச் சுற்றிச்சுற்றி வந்தது. அதிபரின்மேல் ஆத்திரப்பட்டான் தன்னை மாற்றியதற்காக. வசந்தாவுக்கு அத்தானின் 'அர்த்தமற்ற கவலை', அமைதியாகத் தூங்கும் தன் செல்வன், விடிந்து செய்யவேண்டிய காரியங்கள் இவற்றைச் சுற்றி வட்டமிட்டு அலையலையவந்தன நினைவுகள்.

பொழுது விடிந்தது. வசந்தா எழுந்து தன் அலுவல்களைக் கவனிக்க ஆரம்பித்தாள். 8-20-க்கு வண்டி. மணி 6 ஆயிற்று ஏகாம்பரம் எழுந்திருக்கவில்லை. வசந்தா மெதுவாக ஏகாம்பரத்தை எழுப்பினாள். 'நேரமாய்விட்டது! எழுந்திருங்கள். வென்னீர் போட்டிருக்கிறேன். குளித்துவிட்டு வாருங்கள். அதற்குள் 'டிபன் ரெடியாகிவிடும்' என்றாள். இயந்திரகதியில் தன் வேலைகளை முடித்துக்கொண்டுவந்து உட்கார்ந்தாள். எதிரே இன்னும் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் 'பையனைப்' பார்த்தான். "சிக்கிரம் டிபனைச் சாப்பிடுங்கள். பயன் விழிப்பதற்குள் உங்கள் பெட்டி, படுக்கைகளை கட்டி வைத்துவிடுகிறேன்" என்றாள் வசந்தா. இதுவரை எந்த ஊருக்கும் தனியாகச் சென்றறியாத ப்ளாஸ்க், தோல்பெட்டி, டால்டால் எல்லாம் ஏகாம்பரத்துடன் கிளம்புவதற்காகத் தயாராயின.

பெட்டி, முதலியவற்றை வேலைக்காரன் வண்டியில் எடுத்துவைத்துக்கொண்டிருந்தான். இதற்கிடையில் விழித்துக்கொண்ட சேகரனை எடுத்துக்கொண்டு பின்கட்டிற்குப் போனாள் வசந்தா. காலைப் பத்திரிக்கையைக் கையில் வைத்துக்கொண்டு வசந்தாவையும், சேகரனையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டிருந்த ஏகாம்பரம் மெதுவாக அவர்களைத் தொடர்ந்து பின்கட்டிற்குச் சென்றான். கடிகாரத்தில் மணி 7-45 அடித்தது. 'சாமான்களெல்லாம் வண்டியிலே வச்சாச்சுங்க' என்றான் வேலைக்காரன். 'அம்மா! அப்பா. அப்பா!' என்று இரண்டு கைகளையும் கொட்டிச் சிரித்தான் சேகர், ஏகாம்பரத்தின் கண்களிலிருந்து ஒரு துளிக் கண்ணீர் கன்னத்தில் விழுந்து சிதறியோடியது. திரும்பிப்பார்த்த வசந்தா திடுக்கிட்டாள். 'என்ன அத்தான்! சின்னப்பிள்ளைமாதிரி' என்றாள் பாதி கேலியும், பரிவும் கலந்த குரலில்.

மதுரையில் பாங்கியிலேயே மேல்மாடியில் ஏகாம்பரம் தங்குவதற்கு வசதியளித்திருந்தார்கள். சாப்பாடு அங்கேயே கொண்டுவந்து கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள். வெகுதூரம் வந்த பிரயாணக் களைப்பால் ஏகாம்பரம் சற்றுக் கண்ணயர்ந்தான். மாலை ஐந்து மணிக்கு கண்விழித்தான். 'மணி ஐந்தாச்சே! சார் இன்னும் தூங்குகிறாரே!' என்று சொல்லிக்கொண்டு உள்ளே நுழைந்த பையன் ' 'வெறுங்காபியா, வேறு ஏதாச்சும் சேத்து வாங்கிவரவா சார்?' என்றான். தான் தூங்கி எழுந்ததும் கையில் காபியுடன் நிற்கும் வசந்தாவின் ஞாபகம் வந்தது. சாய்வு நாற்காலியில் அமர்ந்துகொண்டு 'சிகெரட்' புகையை வளையம் வளையமாக ஊதிக்கொண்டு அதையே பார்த்துக்கொண்டிருந்தான். சிகெரட் புகையின் நீலநிற வட்டவடிவத்தின் இடையே வசந்தாவின் முகம் மூடுபனிக்கு இடையே தோன்றிய முழுமதிபோல் தோன்றியது. கண்களை கசக்கிக்கொண்டு வேறு பக்கம் திரும்பினான். Cow and gate குழந்தை படம் ஒன்று தொங்கியது. சேகரனின் படம் ஒன்று வீட்டில் தன மேஜையில் கண்ணாடியிட்டு வைத்திருப்பது அவன் நினைவிற்கு வந்தது.

'என்ன சார்! பிரயாண அலுப்பு, நன்றாகத் தூங்கினீர்கள் போல் இருக்கிறது. ரீகலில் Roman Holiday நடக்கிறது. நல்ல படமாம்சார் வாருங்கள் போகலாம்' என்றார், அப்பொழுது தான அங்கு வந்த பாங்கு செகரட்டரி பாக்கியநாதன்.

வீடு, வசந்தா, சேகர் இவர்களைச் சுற்றிச் சுற்றி இழைந்துவரும் சிந்தனையை திசை

மாற்றும் நோக்கத்துடன் படக்காட்சிக்குச் செல்ல ஒப்புக்கொண்டான்.

நாடாளும் ராணி தனக்கிருக்கும் அடுக்கடுக்கான அலுவல்களுக்கும், தொடர்ந்திருக்கும் தொல்லைகளுக்கும் இடையே தன் இச்சைப்படி ஊரைச்சுற்றிப் பார்த்து சுயேச்சையாக அநுபவிக்க முடியவில்லையே என்று ஏங்குவதாகக் கதை. ராணி தூங்குவதற்காக அவளுக்கு தூக்கமருந்துகொடுத்து படுக்கவைத்து விடுகிறார்கள். ஒருவருக்கும் தெரியாமல் அரண்மனையை விட்டு வெளியேறி அன்று இரவு முழுவதும் பத்திரிக்கை நிருபர் ஒருவனுடன் சுற்றித்திரிகிறாள். இந்தக் கட்டத்தில் ஏகாம்பரம் கொட்டகையிலிருந்து எழுந்து வெளியே வந்துவிட்டார். காரியதரிசி எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுக்கொண்டும் 'எனக்கு தலை வலிக்குது சார்! நீங்கள் பார்த்துவிட்டு வாருங்கள். நான் பாங்குக்கு போகிறேன். தயவு செய்து மன்னியுங்கள்' என்று கூறிவிட்டு வந்துவிட்டார். அவள் நாடாளும் ராணி, அரண்மனையைவிட்டு ஒருவருக்கும் தெரியாமல் வந்தாலும், திரும்பச் செல்ல அனுமதி உண்டு. வேலைக்கு வந்த இடத்தில், வேலைகளைப் போட்டுவிட்டு திரும்ப ஊர்சென்றால் ஏகாம்பரத்திற்கு யார் வேலை கொடுப்பார்கள்!

கொட்டகையிலிருந்து நேராக அறைக்கு வந்த ஏகாம்பரம் தன் எண்ணங்களையெல்லாம் அப்படியே ஏட்டில் வடித்து வசந்தாவுக்கு அனுப்புவது என்று தீர்மானித்து காகிதம், பேனா சகிதம் மேஜையருகில் உட்கார்ந்தார். கடிதத்தை எப்படி ஆரம்பிப்பது என்ற பிரச்சனையில் ஐந்தாறு காகிதங்கள் கிழித்தெறியப்பட்டன. பிறகு ஒருமாதிரியாக. 'கண்மணி வசந்தாவுக்கு!......என்று ஆரம்பித்து ஒரு மணி நேரத்திற்குள் ஒரு பக்கம் கடிதம் எழுதி தானே அதை அஞ்சல் நிலையத்தில் கொண்டு போய்ச் சேர்த்தார். அதன் பிறகுதான் ஏகாம்பரத்திற்கு கொஞ்சம் நிம்மதியாயிருந்தது. கடிதத்தைப் பற்றி தன் மனைவி என்ன நினைப்பாள். 'பைத்தியக்கார அத்தான்' என்பாளா அல்லது 'என்ன இருந்தாலும் அத்தானுக்கு என்மேல் கொள்ளை ஆசை' என்று உவகை கொள்வாளா என்ற நினைப்பாலும் அதைத் தொடர்ந்து இரண்டுநாட்கள் கடிதத்திற்கு என்னவிதமான பதில் வரும் என்று எதிர்பார்ப்பதிலும் கழித்தார் ஏகாம்பரம்.

இரண்டு நாட்கள் கழித்து வசந்தாவிடமிருந்து, ஏகாம்பரத்திற்கு ஒரு கடிதம் வந்தது. கடிததில் ஏகாம்பரம் உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளவேண்டும் என்றும் வாரம் இரண்டு எண்ணெய் முழுக்குத் தவறக் கூடாது என்றும் இன்னும் பல உடல்நலக் குறிப்புக்களுடனும் இருந்தன. இடையிடையே சேகரனைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தாள். உடனே வசந்தாவின் கடிதத்திற்குப் பதில் கடிதம் எழுதினார். அதில் வசந்தாவின் போட்டோ (திருமணத்தன்று எடுத்தது) ஒன்று அனுப்பும்படியும் எழுதியிருந்தார்.

அடுத்த இரண்டு நாட்களில் எதிர்பார்த்தபடி போட்டோவும் கடிதமும் வந்தது.' ஏகாம்பரத்திற்கு ஒரே மகிழ்ச்சி. அன்றைய கடிதத்தில் கொஞ்சம் 'செண்ட்'டும் தெளித்து அனுப்பினார். அத்தானின் இந்தக் கைவண்ணங்களெல்லாம் வசந்தாவை இரண்டு ஆண்டுகளுக்குமுன்பு இழுத்துச்சென்றது. ஏகாம்பரம் வாரம் மூன்று கடிதங்கள் வீதம் எழுதிவந்தான். ஒவ்வொரு சமயம் வசந்தாவிடம் இருந்து கடிதம் வர தாமதமாகிவிடும், வீட்டு வேலை, சேகரனின் தொந்தரவு இவைகள் அதிகமாயிருந்ததால். அந்த நாட்களில் எல்லாம் ஏகாம்பரத்திற்கு வசந்தாவின்மேல் எல்லையில்லாத கோபமும், கொந்தளிப்பும் ஏற்படும்—ஆனால் அது கொஞ்சநேரத்திற்குத்தான். வசந்தாவின் கடிதம் கையில் கிடைத்ததுமே கோபமும், கொந்தளிப்பும் ஓடி, ஒழிந்து ஆசையும், அன்பும் பெருக்கெடுத்து அவனை உவகைப்பூங்காவில் ஊஞ்சலாடச் செய்யும். பாங்கி அலுவல்போக எஞ்சிய நேரத்தில் வசந்தாவுடன் உரையாடல் நேராக அல்ல-கடிதம் மூலம்தான். கடந்து சென்ற இன்ப நிகழ்ச்சிகளையும், வர இருக்கும் இன்ப நாட்களையும் எண்ணி இடையே இருக்கும் ஆறு மாத காலத்தை ஒருவாறு கழித்துக்கொண்டிருந்தார்.

அன்று சனிக்கிழமை. காலையில் பாங்கி அலுவல்களை முடித்துக்கொண்டு மதியம் பையனை அனுப்பியிருந்தார் சாப்பாடு எடுத்து வர. புதன்கிழமையுடன் அவர் வந்த அலுவல் முடிந்துவிடும். அன்று இரவே கிளம்பினாலும் வியாழனன்றுதான் வசந்தாவைச் சந்திக்க இயலும். இத்தனை நாட்கள் பொறுத்துக் கொண்டிருந்த ஏகாம்பரத்திற்கு இந்த நான்கு நாட்களை எப்படிக் கழிப்பது என்றே புரியவில்லை. தேர்வை முடித்து இரண்டுமூன்று திங்கள் பொறுமையாகக் காத்திருக்கலாம். ஆனால் நாளைத் தேர்வு முடிவு என்று தெரிந்ததும், அந்த இடைவேளையில் மாணவன் மனம் படும்பாடும், ஏகாம்பரத்தின் நிலைக்கும் அதிக வித்தியாசமில்லை. " சார்! சாப்பாடு கொண்

ந்துவிட்டேன், நீங்க சாப்பிடலாம் சார்" ன்ற பையனின் குரல் கேட்டு ஏகாம்பரம் ழுந்தான். பையன் மேஜையின்மேல் இலை யப் போட்டு 'டிபன்' பாத்திரத்திலிருந்து, ய், கறி இவற்றை எடுத்துவைத்தான். ககால் அலம்பிக்கொண்டு ஏகாம்பரம் சாப் ட உட்கார்ந்தான். 'என்ன சாப்பாட்ரு து! இன்னும் நாலுநாளைக்குள்ளே என் சிரையே வாங்கிடுவான்போல இருக்கே!' ன்று சலித்துக்கொண்டான் ஏகாம்பரம். ப்பாடு என்னமோ என்றும்போல்தான் ருந்தது. கோபம், தாபம், கொதிப்பு, காந்தளிப்பு, இன்பம், துன்பம் முதலிய ணர்ச்சிகள் மேல் ஓங்கியிருக்கும்பொழுது ப்பாடு என்னதான் ருசியாயிருந்தாலும் ரே மண்ணுகத்தான் தோன்றும். அரை றைச் சாப்பாட்டுடன் எழுந்த ஏகாம்பரத் ன் மனம் வசந்தாவையும், அவளைச் சந்திக்க ருக்கும் அந்த நாளைப்பற்றியும் சிந்தித்துக் காண்டிருந்தான்.

நீலநிறப்புடவை. அதற்கு ஏற்றுப்போல வள்ளை நிறத்தில் ஜாக்கட் இவற்றுடன் ழகாக வாரிவிடப்பட்ட தலையில் கொஞ்சம் ல்லிகைப்பூ. அழகுச் சாதனங்களை அளவுக்கு திகமாகக் கையாளவேண்டிய நிலையில் ல்லை அவள். இவற்றுடன்தான் கல்லூரி ல் வசந்தாவைப பள்ளிப் பருவத்திற்குப் ன் சந்தித்தான் ஏகாம்பரம். மற்ற மாணவர் ளைப்போலன்றி அவர்கள் கூட்டத்திலேயே ரு அலாதிப் போக்குடையவன். பெண்களைக் ண்டாலே கேலியும், கிண்டலும் செய்து, ந்தப்பெண்ணுவது, தற்செயலாகச் சிரித்தால் ன்னைப் பார்த்துத்தான் சிரிக்கிருள் என்று னைத்து எக்காளம்கொட்டும் மற்ற மாணவர் ளின் போக்கு அவனுக்குப் பிடிப்பதில்லை.

விருப்பு, வெறுப்பு அற்ற மோன நிலையில் ல்லை ஏகாம்பரம். அதே சமயத்தில் பெண் ளக் கண்டாலே போதைகொள்ளும் நிலையும் வனிடம் இல்லை. ஏகாம்பரத்தின் இந்தக் ளித்தன்மை' வசந்தாவைக் கவர்ந்தது. சந்தாவைப் பற்றிச் சின்னவயதிலிருந்தே காம்பரத்திற்கு நன்ருகத் தெரியும். அவளு டய அடக்கமும், பண்பும் ஏகாம்பரத்தின் னதில் தனக்கு எனத் தனி இடம் பிடித்துக் காண்டன. வசந்தாவின் அழகு, தென்றல் ற்றைப்போல் இனிமையானது. மலைச்சார ல் வழிந்தோடும் தெள்ளிய நீரோடை பான்றது. பாம்பின் அழகும், போதைப் பாருளின் மயக்க சக்தியும் பொருந்தியவ ல்ல வசந்தா. மற்ற கல்லூரிக் காதலர்களைப் பால, சினிமாவுக்கும் கடற்கரைக்கும் சென்று தங்கள் காதலை விளம்பரம் செய்துகொள்ள வில்லை அவர்கள். ஒருவர் உள்ளத்தை மற் ருெருவர் அறிந்து பழகும் வாய்ப்பை அவர் களின் பள்ளிப் பருவ அறிமுகம் அளித்தது. அந்த அறிமுகத்திற்கு வித்திட்டு வளர்த்தது அவர்களது முதல் கல்லூரிச் சந்திப்பு. வசந்தா பேச்சில் வல்லவள். மேடையில்தான். அவள் அத்தான் ஏகாம்பரத்தின் முன் அல்ல!

சீதக்காதி செந்தமிழ் மன்றத்தின் சார்பில் 'வள்ளுவன் கண்ட இல்லறம்' என்ற தலைப்பில் நடந்த பேச்சுப்போட்டியில் பல கல்லூரிகளின் சார்பில் மாணவ, மாணவிகள் கலந்துகொண் டனர். 'வள்ளுவன்கண்ட இல்லறத்'தைப் பற்றி வசந்தா தக்க மேற்கோள்களுடனும், வாழ்க்கைக்கு ஒத்துவரக்கூடியதுமான வள் ளுவன் நெறி இருப்பதுபற்றியும், வள்ளுவன் ஆராய்ந்து அறிந்து, எடுத்தியம்பிய தெள்ளிய மொழி பற்றியும், குறிப்பாக இல்லறவியலில் வள்ளுவன் கண்டுணர்ந்து உலகுக்கு உணர்த் திய உள்ள இயல்பற்றியும், தற்காலத்தில் எப்படி அன்பின் பிணைப்பு சிறுகச்சிறுக விடு பட்டு மனித இனத்தைவிட்டு விலகி ஓடுகிறது என்பதுபற்றியும், இந்த அழிவைத்தடுக்க வள்ளுவன் நெறியைக் கைக்கொள்ள வேண் டிய அவசியம் பற்றியும் அவளாற்றிய சொற் பொழிவு எல்லோர் உள்ளத்தையும் ஈர்த்தது. அன்று போட்டியின முடிவில் வசந்தா வெற்றி பெற்ற செய்திகேட்டு ஏகாம்பரம் அவளைச் சந்தித்துத் தன் வாழ்த்தைத் தெரிவித்தான். பரிசும் பலத்த கைதட்டலும் கிடைத்தபொ ழுதுகூட வசந்தா அவ்வளவு பெருமைப்பட வில்லை. ஏகாம்பரத்தின் வாழ்த்துக்கள்— வெறும் வார்த்தைகள்தான்—வசந்தாவை உல்லாசக்கடலில் தள்ளி உவகை ஓடத்தில் மிதக்கவைத்தது.

ஏகாம்பரத்தின் நினைவலைகளில் இந்தப் பழைய நிகழ்ச்சி என்றென்றும் மாருத புது மையுடன் சுருளவிழ்ந்து நீண்டது. இந்நிகழ்ச் சியில் ஆழ்ந்திருந்த அவன் அந்த நாளைப் போல் வசந்தாவை சென்னையில் தனிமையில் சந்திக்க விரும்பினுன். வியாழனன்று காலை யில் வசந்தாவை சென்னையில் வந்து தன்னை சந்திக்குமாறு எழுதி அனுப்பினுன். கல்லூரி யில் தாங்கள் கழித்த அந்த இன்ப நாட்களைப் போல இரண்டொருநாட்கள் சென்னையில் கழிக்கவிரும்பினுன். வசந்தாவும் அவன் வேண்டுகோளுக்கிணங்கி சேகரனைத் தன் அத்தை தயாரம்மாளிடம் விட்டுவிட்டு சென்னைசென்று வியாழனன்று காலை ஏகாம் பரத்தைச் சந்தித்தாள்.

ஆங்கிலம்—இந்தி ஆகிய இரண்டு அன்னிய மொழிகளில் எந்த அன்னிய மொழி, தமிழகம், திராவிடம் போன்ற பகுதிகளுக்கு வேண்டப் படுவது — பயன்படுவது — இன்றியமையாத தாகத் தேவைப்படுவது ஆகும் என்றால், ஆங்கிலந்தான் என்று ஆயிரமாயிரம் தடவைகள் வேண்டுமானாலும் குன்றின்மீது ஏறிநின்று உரத்தக் குரலில் கூவலாம்.

இந்தி மொழி வெறியர்களும், வடநாட்டுக் காங்கிரசுத் தலைவர்களும் ஆங்கிலத்தை அறவே ஒதுக்கிவிடவேண்டும் என்று கூறு கிறார்களா என்று பார்த்தால், அப்படியும் இல்லை. அகில உலகப் பொதுமொழி என்ற முறையில் ஆங்கிலத்தை இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள எல்லோரும் படிக்கவேண் டும் என்றுதான் கூறுகிறார்கள். இந்தியத் தேசியமொழியாகவும்—இந்தியப் பொது மொழியாகவும்—இந்திய அரசியல் மொழியாக வும் இந்தி விளங்கவேண்டும்; அகில உலகப் பொதுமொழியாக ஆங்கிலம் இருக்கட்டும்; மேற்கண்ட வகைகளுக்காக இந்த இரண்டு மொழியையும் இந்தியத் துணைக்கண்டத்தி லுள்ள அனைவரும் தங்கள் தங்கள் தாய் மொழி—வட்டாரமொழி ஆகியவற்றோடு கட் டாயம் கற்றுக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்துகின்றனர்.

தமிழகத்திலுள்ள தமிழர்களுக்கு ஆங்கிலம் —இந்தி என்ற இந்த இரண்டு மொழிகளும் இன்றியமையாதனவா என்று ஆராய்ந்து பார்த்தால், ஆங்கிலந்தான் இன்றியமையாது வேண்டப்படும் ஒன்றாக இருக்குமே ஒழிய, இந்தி எந்தவகையிலும் வேண்டப்படுவதாக இருக்காது என்பதை உணரலாம். தமிழகத் தைப் பொறுத்துத் தமிழை முன்னிறுத்திக் கூறப்படும் காரணங்கள் ஆந்திரம்—கருநாட கம்—கேரளம் ஆகியவற்றைப் பொறுத்து முறையே தெலுங்கு—கன்னடம்—மலையாளம் ஆகிய மொழிகளை முன்னிறுத்திக் கூறுவதற் கும் பொருந்தும் என்பதை இங்கு அறிந்து கொள்ளலாகும். அதாவது தமிழகத்தின் எடுத்துக்காட்டு ஆந்திரம்—கருநாடகம்—கேர ளம் ஆகிய பிற திராவிடப் பகுதிகளுக்கும் பொருந்தும் என்க.

தமிழகத்தின் அரசின் அலுவல்கள், ஊராட்சிமன்ற — நகராட்சிமன்ற — மாவட் டாட்சிமன்ற—சட்டமன்ற நடவடிக்கைகள், பள்ளி—கல்லூரி—பல்கலைக்கழகப் படிப்பு, உள்நாட்டு அஞ்சல்—தந்திப் போக்குவரத்து, உள்நாட்டு வாணிகம் இன்னபிறவெல்லாம் தமிழிலேயே நடைபெறலாம் — நடைபெற முடியும். ஆனால் உலகத்தின் பிற பகுதிக ளோடு அரசியல் தொடர்பு, வாணிகத் தொடர்பு, பண்பாட்டுத் தொடர்பு ஆகியவற் றைக் கொள்ளவும், உலகில் வளர்ந்துள்ள அறிவியல் அறிவைப் பெறவும் தமிழ் இன் றைய நிலையில் பயன்படுவதாக இல்லை. தமிழ் நிறைவேற்றித்தராத தன்மைகளை நிறைவேற் றித்தர வேறு ஒரு மொழி தமிழர்க்கு முக்கிய மாகத் தேவைப்படும். இன்றைய நிலையில் தமிழ் நிறைவேற்றித்தராத தன்மைகள் அத் துணையையும் இந்தி நிறைவேற்றித் தருமா என்றால், தராது; ஆனால் ஆங்கிலம் முழுக்க முழுக்க நிறைவேற்றித்தரும். இந்தியால் எதிர்பார்க்கப்படும் பலன்களோடு இந்தியால் நிறைவேற்றப்படமுடியாத பலன்களையும் சேர்த்து நிறைவேற்றித்தரும் தகுதியை ஆங்கிலம் போற்றத்தகுந்த அளவுக்குப் பெற் றிருக்கிறது. எனவே தமிழுக்கு உதவியாக ஆங்கிலம் மட்டும் இருந்தால் போதும்; வேறு எந்த மொழி உதவியும் தேவையில்லை; வேறு எந்த மொழியும் முழுப்பலனை அளிக்கவல்ல தல்ல.

இந்தி, இலக்கண இலக்கியச் செறிவுடை யது—உலகத்தொடர்பு கொள்ளச் செய்வது —அறிவியல் அறிவை வளர்ப்பது—உலக வாணிகத் தொடர்பை உண்டுபண்ணுவது— நாகரிகப் பண்பாட்டுத் தொடர்பை உருவாக் குவது என்று கூறி அதனைத் தமிழகத்தார்— திராவிடத்தார்மீது திணிக்க யாராலும் இய லாது. ஏனெனில் அந்தத் தன்மைகள் இந்தியிடம் அறவே கிடையாது; ஆனால் ஆங்கிலத்திடம் போதுமான அளவுக்கு இருக் கின்றன.

இந்தி, இந்தியாவின் சொந்தமொழி, ஆங் கிலம் அன்னியமொழி என்ற காரணத்தைக் காட்டியும் இந்தியைத் தமிழகத்தில்—திரா விடத்தில் திணிக்கமுடியாது. ஏனெனில், மேலே சுட்டிக்காட்டியுள்ளபடி ஆங்கிலம் எந்த அளவுக்கு அன்னியமொழியோ அதே அளவுக்கு இந்தியும் தமிழர்க்கு—திராவி டர்க்கு அன்னியமொழிதான். இந்தி வேண்டு மானால் இந்தி பேசப்படும் வடநாட்டுப்பகுதி களுக்குச் சொந்த மொழியாகத் திகழலாமே யொழிய, அது தென்னாட்டிற்கு ஒருகாலும் சொந்தமொழியாகாது.

இந்தி, இந்தியத் துணைக்கண்டத்தின் தேசிய மொழி, எனவே அதுதான் இந்தியா வின் அரசியல் மொழியாகவும், பொதுமொழி யாகவும் இருக்கவேண்டும் என்று சொல்லித் தமிழர்—திராவிடர்மீது அதனைப் புகுத்த

ஆங்கிலம்—இந்தி ஆகிய இரண்டு அன்னிய மொழிகளில் எந்த அன்னிய மொழி, தமிழகம், திராவிடம் போன்ற பகுதிகளுக்கு வேண்டப் படுவது — பயன்படுவது — இன்றியமையாத தாகத் தேவைப்படுவது ஆகும் என்றால், ஆங்கிலந்தான் என்று ஆயிரமாயிரம் தடவைகள் வேண்டுமானாலும் குன்றின்மீது ஏறிநின்று உரத்தக் குரலில் கூவலாம்.

இந்தி மொழி வெறியர்களும், வடநாட்டுக் காங்கிரசுத் தலைவர்களும் ஆங்கிலத்தை அறவே ஒதுக்கிவிடவேண்டும் என்று கூறு கிறார்களா என்று பார்த்தால், அப்படியும் இல்லை. அகில உலகப் பொதுமொழி என்ற முறையில் ஆங்கிலத்தை இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள எல்லோரும் படிக்கவேண் டும் என்றுதான் கூறுகிறார்கள். இந்தியத் தேசியமொழியாகவும்—இந்தியப் பொது மொழியாகவும்—இந்திய அரசியல் மொழியாக வும் இந்தி விளங்கவேண்டும்; அகில உலகப் பொதுமொழியாக ஆங்கிலம் இருக்கட்டும்; மேற்கண்ட வகைகளுக்காக இந்த இரண்டு மொழியையும் இந்தியத் துணைக்கண்டத்தி லுள்ள அனைவரும் தங்கள் தங்கள் தாய் மொழி—வட்டாரமொழி ஆகியவற்றோடு கட் டாயம் கற்றுக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்துகின்றனர்.

தமிழகத்திலுள்ள தமிழர்களுக்கு ஆங்கிலம் —இந்தி என்ற இந்த இரண்டு மொழிகளும் இன்றியமையாதனவா என்று ஆராய்ந்து பார்த்தால், ஆங்கிலந்தான் இன்றியமையாது வேண்டப்படும் ஒன்றாக இருக்குமே ஒழிய, இந்தி எந்தவகையிலும் வேண்டப்படுவதாக இருக்காது என்பதை உணரலாம். தமிழகத் தைப் பொறுத்துத் தமிழை முன்னிறுத்திக் கூறப்படும் காரணங்கள் ஆந்திரம்—கருநாட கம்—கேரளம் ஆகியவற்றைப் பொறுத்து முறையே தெலுங்கு—கன்னடம்—மலையாளம் ஆகிய மொழிகளை முன்னிறுத்திக் கூறுவதற் கும் பொருந்தும் என்பதை இங்கு அறிந்து கொள்ளலாகும். அதாவது தமிழகத்தின் எடுத்துக்காட்டு ஆந்திரம்—கருநாடகம்—கேர ளம் ஆகிய பிற திராவிடப் பகுதிகளுக்கும் பொருந்தும் என்க.

தமிழகத்தின் அரசின் அலுவல்கள், ஊராட்சிமன்ற — நகராட்சிமன்ற — மாவட் டாட்சிமன்ற—சட்டமன்ற நடவடிக்கைகள், பள்ளி—கல்லூரி—பல்கலைக்கழகப் படிப்பு, உள்நாட்டு அஞ்சல்—தந்திப் போக்குவரத்து, உள்நாட்டு வாணிகம் இன்னபிறவெல்லாம் தமிழிலேயே நடைபெறலாம் — நடைபெற முடியும். ஆனால் உலகத்தின் பிற பகுதிக ளோடு அரசியல் தொடர்பு, வாணிகத் தொடர்பு, பண்பாட்டுத் தொடர்பு ஆகியவற் றைக் கொள்ளவும், உலகில் வளர்ந்துள்ள அறிவியல் அறிவைப் பெறவும் தமிழ் இன் றைய நிலையில் பயன்படுவதாக இல்லை. தமிழ் நிறைவேற்றித்தராத தன்மைகளை நிறைவேற் றித்தர வேறு ஒரு மொழி தமிழர்க்கு முக்கிய மாகத் தேவைப்படும். இன்றைய நிலையில் தமிழ் நிறைவேற்றித்தராத தன்மைகள் அத் துணையையும் இந்தி நிறைவேற்றித் தருமா என்றால், தராது; ஆனால் ஆங்கிலம் முழுக்க முழுக்க நிறைவேற்றித்தரும். இந்தியால் எதிர்பார்க்கப்படும் பலன்களோடு இந்தியால் நிறைவேற்றப்படமுடியாத பலன்களையும் சேர்த்து நிறைவேற்றித்தரும் தகுதியை ஆங்கிலம் போற்றத்தகுந்த அளவுக்குப் பெற் றிருக்கிறது. எனவே தமிழுக்கு உதவியாக ஆங்கிலம் மட்டும் இருந்தால் போதும்; வேறு எந்த மொழி உதவியும் தேவையில்லை; வேறு எந்த மொழியும் முழுப்பலனை அளிக்கவல்ல தல்ல.

இந்தி, இலக்கண இலக்கியச் செறிவுடை யது—உலகத்தொடர்பு கொள்ளச் செய்வது —அறிவியல் அறிவை வளர்ப்பது—உலக வாணிகத் தொடர்பை உண்டுபண்ணுவது— நாகரிகப் பண்பாட்டுத் தொடர்பை உருவாக் குவது என்று கூறி அதனைத் தமிழகத்தார்— திராவிடத்தார்மீது திணிக்க யாராலும் இய லாது. ஏனெனில் அந்தத் தன்மைகள் இந்தியிடம் அறவே கிடையாது; ஆனால் ஆங்கிலத்திடம் போதுமான அளவுக்கு இருக் கின்றன.

இந்தி, இந்தியாவின் சொந்தமொழி, ஆங் கிலம் அன்னியமொழி என்ற காரணத்தைக் காட்டியும் இந்தியைத் தமிழகத்தில்—திரா விடத்தில் திணிக்கமுடியாது. ஏனெனில், மேலே சுட்டிக்காட்டியுள்ளபடி ஆங்கிலம் எந்த அளவுக்கு அன்னியமொழியோ அதே அளவுக்கு இந்தியும் தமிழர்க்கு—திராவி டர்க்கு அன்னியமொழிதான். இந்தி வேண்டு மானால் இந்தி பேசப்படும் வடநாட்டுப்பகுதி களுக்குச் சொந்த மொழியாகத் திகழலாமே யொழிய, அது தென்னாட்டிற்கு ஒருகாலும் சொந்தமொழியாகாது.

இந்தி, இந்தியத் துணைக்கண்டத்தின் தேசிய மொழி, எனவே அதுதான் இந்தியா வின் அரசியல் மொழியாகவும், பொதுமொழி யாகவும் இருக்கவேண்டும் என்று சொல்லித் தமிழர்—திராவிடர்மீது அதனைப் புகுத்த

இயலாது. ஏனெனில், தமிழகத்தின் மண்ணுக்குரிய தாய்மொழி அதாவது தேசிய மொழி தமிழேயல்லாது வேறு மொழியல்ல. அதுபோலவே ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகியவற்றின் மண்ணுக்குரிய தேசிய மொழிகள் முறையே தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகுமேயல்லாது வேறு மொழியாகாது. ஒரு மனிதனுக்கு எப்படி இரண்டு பெற்றெடுத்த தாய்மார்கள் இருக்கமுடியாவோ, அதுபோலவே ஒரு குறிப்பிட்ட வரலாற்று முறையில் வளர்ந்த நாட்டிற்கு இரண்டு தேசியமொழிகள் இருக்கமுடியா. ஆங்கிலமோ அல்லது சீன மொழிபோ எப்படித் தமிழகத்திற்குத் தேசிய மொழி ஆகாதோ அப்படியே இந்தியும் தமிழகத்திற்குத் தேசியமொழியாகாது; அது தமிழகத்தின் நிலத்திற்குரிய மொழி அல்ல.

இந்தி, தமிழகத்தில் அரசியல் மொழியாக இருப்பதற்குத் தமிழைவிட பொருத்தமுடையது என்று சொல்லிக்கொண்டு தமிழகத்தில் நுழையமுடியாது. ஏனெனில், இந்தி தமிழைவிட இலக்கணவளம், இலக்கிய வளம், சொல்வளம், பொருள்வளம் ஆகியவற்றில் மிக மிகக் குறைபாடுடைய மொழியாகும். மொழி வளர்ச்சிக்குரிய வேர்ச்சொற்கள் தமிழில் இருப்பதைப்போல், இந்தியில் இல்லை. அது வடமொழியையாவது அல்லது அரபி, பாரசீக மொழிகளையாவதுதான் சொற்களுக்கு நம்பி வாழவேண்டும். தமிழகத்தின் அரசியலை நடத்தத் தமிழே போதுமானது; இந்தி அவசியமேயில்லை. தமிழகத்தில் கணக்கப்பிள்ளை பட்டாமணியாரிடம் தமிழிலேயே பேசலாம்; பட்டாமணியார் இரெவினியூ இன்சுபெக்டரிடம் தமிழிலேயே பேசலாம்; இரெவினியூ இன்சுபெக்டர் தாசில்தாரிடம் தமிழிலேயே பேசலாம்; தாசில்தார் கலெக்டரிடம் தமிழிலேயே பேசலாம்; கலெக்டர் இரெவினியூ போர்டு மெம்பரிடம் தமிழிலேயே பேசலாம்; இரெவினியூ போர்டு மெம்பர் பிரதம காரிய தரிசியிடம் தமிழிலேயே பேசலாம்; பிரதமக் காரியதரிசி இரெவினியூ அமைச்சரிடம் தமிழிலேயே பேசலாம்; இரெவினியூ அமைச்சர் முதலமைச்சரிடம் தமிழிலேயே பேசலாம்! இந்த அலுவலாளர்கள் பெயர்களையெல்லாம் தமிழிலேயே மாற்றியமைக்கலாம்; சட்டமன்றம், ஊராட்சி—நகராட்சி—மாவட்டாட்சி மன்றங்கள், நீதிமன்றங்கள் ஆகிய எல்லாமும் தமிழகத்தில் தமிழிலேயே நடைபெறலாம்! தமிழக முதலமைச்சர் வடநாட்டோடும் பிறநாடுகளோடும் பேசுவதற்குத் தமிழ் பயன்படாது. அப்பொழுது வேறோர் மொழி தேவைப்படும். அந்த வேறோர்மொழி அகில உலகப் பொதுமொழியான ஆங்கிலமாக இருந்தால்தான் பிறநாடுகள் எல்லாவற்றோடும் தொடர்புகொள்ள முடியும். உலக நாடுகள் அனைத்தோடும் தொடர்பு கொள்ளுவதற்கு வைத்துக்கொள்ளும் ஆங்கிலத்தையே வடநாட்டோடும் தொடர்பு கொள்வதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். வடநாட்டுக்காகத் தனியாக இந்தியைப் படித்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் தமிழகத்தார்க்கு இல்லை.

இந்தி, இந்தியாவின் பொதுமொழியாக இருப்பதற்குத் தகுதிபடைத்தது என்று கூறிக்கொண்டு தமிழகத்தில் எட்டிப்பார்க்க இயலாது. ஏனெனில் உலகப் பொதுமொழியாக விளங்கும் ஆங்கிலமே இந்தியாவின் பொதுமொழியாக விளங்குவதற்கு இந்தியைவிட எல்லாவகையிலும் சிறப்பும் தகுதியும் படைத்ததாக இருக்கிறது. தமிழகத்தார்—திராவிடத்தார் டோக்கியோவோடு, சாங்கையோடு, பீக்கிங்கோடு, இரங்கூனோடு, சிங்கப்பூரோடு, இலண்டனோடு, மாசுக்கோவோடு, வாசிங்டனோடு தொடர்பு கொள்ளுவதற்கு ஏற்றுக்கொள்ளுகிற ஆங்கிலத்தையே வடநாட்டு ஆமதாபாத்தோடும், அலகாபாத்தோடும், பம்பாயோடும், கல்கத்தாவோடும், டில்லியோடும், டார்சிலிங்கோடும் தொடர்புகொள்ளுதற்குக் கொள்ளலாமே! வடநாட்டிற்காக என்று இந்தியைத் தனியாகக் கற்றுக்கொள்ளவேண்டிய அவசியமில்லையே. தமிழகத்தார்—திராவிடத்தார் உலகத்தொடர்பு—உலகவாணிகம்—அறிவியல் ஆகியவற்றிற்காக எப்படி ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ள வேண்டிய இன்றியமையாத நிலையிலிருக்கிறார்களோ அதேபோலவே, இந்தி மொழி பேசும் வடநாட்டாரும், மராட்டியரும், பஞ்சாபிகளும், வங்காளிகளும் தங்கள் தங்கள் தாய்மொழியோடு அகில உலகப் பொதுமொழியான ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ளவேண்டிய இன்றியமையாத நிலையிலிருக்கிறார்கள். தென்னாட்டாரும் வடநாட்டாரும் கற்றுத்தீரவேண்டிய ஆங்கிலமே ஏன் இந்தியாவின் பொதுமொழியாக இருக்கக்கூடாது? இந்தியாவிற்கு என்று தனியாக ஒரு பொதுமொழி ஏன்? அதற்காகக் காலத்தையும், கருத்தையும், பொருளையும் ஏன் வீணாக்கிக்கொண்டிருக்க வேண்டும்? ஆங்கிலத்துக்காகச் செலவிடப்படும் காலமும், கருத்தும், பொருளும் அகில உலகத்திற்கு மட்டுமல்லாமல், இந்தியத் துணைக்கண்டத்திற்கும் சேர்த்துப் பயன்படுவனவாகுமே! தமிழகத்திலுள்ள முக்கியமான அரசியல் தலைவர்களும், ஆட்சியாளர்களும்

பருவணிகர்களுந்தான் பிறநாடுகளோடு தொடர்புகொள்ளவேண்டியவர்களாக இருப்ர்கள். அவர்கள் எப்படியும் ஆங்கிலம் ற்றுத்தீரவேண்டியவர்களாக இருக்கப்போகிர்கள். அதுபோலவே வடநாட்டிலுள்ள க்கியமானவர்களும் ஆங்கிலம் கற்றுத்தீர வண்டியவர்களாக இருக்கப்போகிறார்கள். இருசாராரும் தமக்குள் தொடர்புகொள்ள இருசாரார்க்கும் தெரிந்த ஆங்கிலத்தையே யன்படுத்திக்கொள்ளலாமே! தமிழகத்தி ள்ள சாதாரணப் பாமரமக்கள் எப்படி கில உலகத் தொடர்புகொள்ளப்போவ ல்லையோ, அதுபோல வடநாட்டுத் தொடர் அவ்வளவாகக் கொள்ளப்போவதில்லை. லைமை இவ்வாறு இருக்கும்போது, தமிழகத் ல்—திராவிடத்தில் இந்திக்கு எந்தவகையில் வசியம் ஏற்படப்போகிறது?

இந்தி, இந்தியாவில் பிற தனித்தனி மொழி ளைப் பேசும் மக்களைக் காட்டிலும் மிகவான க்களால் பேசப்படுவதால், அதுவே இந்தியா ின் பொதுமொழியாக இருப்பதற்குத் தகுதி டைத்தது என்று சொல்லப்படுகிறது. மிக ான மக்களால் பேசப்படுகிறது என்பது ன்றுமட்டுமே பொதுமொழி ஆவதற்கான குதி அல்லவே. ஆசியாக்கண்டத்திலும், லகிலும் சீனமொழி, மற்றமொழிகள் எல்லா ற்றைக் காட்டிலும் மிகவான மக்களால் பசப்படுகிறது என்ற காரணத்துக்காக அது ஆசியாக்கண்டத்திற்கோ அல்லது உல ற்கோ பொதுமொழியாக ஆக்கப்பட ில்லையே! ஆங்கிலந்தான் ஆசியாக்கண்டத் திற்கும் உலகிற்கும் பொதுமொழியாக இலங் கிறது. அதே ஆங்கிலம் இந்தியத் துணைக் ண்டத்திற்கும் பொதுமொழியாக விளங்க ாமே!

தென்னாட்டவர்கள் வடநாட்டிற்குச் செல்ல வண்டி நேரிட்டால், இந்திமொழி கற்றுக் காள்வது பயன்படுமே என்று சிலர் சொல் க்கூடும். அப்படி அடிக்கடிப் போகவேண்டி நேரிடுகிற ஒரு சிலர் வேண்டுமானால் இந்தி யைத் தனியாக விருப்பப்படி கற்றுக்கொள்ள ாமேயொழிய, அதற்காக தென்னாட்டிலுள்ள ல்லோரும் இந்தியைக் கட்டாயமாகவும், அவசியமாகவும் கற்றுக்கொள்ளவேண்டிய ில்லையே!

மேற் சுட்டிக்காட்டிய காரணங்களைக்கொண்டு எந்த கையில் பார்த்தாலும் தமிழகத்துக்கோ அல்லது திரா டத்துக்கோ இந்தி அறவே அவசியமற்ற மொழி என் து புலப்படும். தமிழர்களோ அல்லது திராவிடர்களோ ங்கள் தாய்மொழி—வட்டாரமொழியோடு ஏதேனும் பயன்படக்கூடிய மொழி ஒன்று கற்றுக்கொள்ளவேண்டும் என்றால், அது ஆங்கிலந்தான்; ஆங்கிலத்தைத் தவிர வேறு மொழியில்லை.

இப்பொழுது ஆங்கிலம் ஆங்கிலேயர்களால் வற்புறுத்தித் திணிக்கப்படும் நிலையில் இல்லை; நாமே விரும்பி ஏற்றுக்கொள்ளும் நிலையில் தான் வைக்கப்பட்டிருக்கிறது. நாம் அதை இப்போது அடிமைத்தனத்தில் ஏற்றுக் கொள்ளவில்லை, விடுதலை உணர்வோடுதான் ஏற்றுக்கொள்கிறோம். அகில உலகப் பொது மொழியாக விளங்கும் ஆங்கிலம், நல்வாய்ப் பாகச் சென்ற சில நூற்றாண்டுகளாக நமக்கு நல்ல பழக்கமான மொழியாக ஆகிவிட்டது. எண்ணம், நடை, உடை, நடிப்புகளில் இந்தி யைவிட ஆங்கிலமே நமக்கு நெருங்கிய பழக்க மான நண்பனாகிவிட்டது. உலக அறிவுச்செல் வங்கள் அத்தனையையும் நமக்கு அறிமுகப் படுத்துவதற்கு ஏற்ற சிறந்த நண்பன் ஆங் கிலமேயாகும்.

லார்டு மெக்காலே இந்தியாவில் பணிமனை அலுவலாளர்களைத் (Office clerks) தயாரிப்ப தற்காகவே ஆங்கிலத்தைப் புகுத்தினார் என்று பல அரைகுறை அரசியல்வாதிகள் தவறாகக் கருதிக்கொண்டிருக்கிறார்கள். லார்டு மெக்காலே 1837-ஆம் ஆண்டில் எழுதிவைத் துள்ள குறிப்பில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட் டுள்ளார்.

> "நாம் இப்போதைய நிலையில் குருதி, நிறம், மனப்பான்மை ஆகியவற்றில் இந்தியர்களாக வும், விருப்பங்கள், கருத்துக்கள், நடவடிக்கை கள், அறிவு ஆகியவற்றில் ஆங்கிலேயர்களாக வும் இருக்கக்கூடிய ஒரு வகுப்பினரை உரு வாக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். அவர் களைக்கொண்டு உள்நாட்டு மொழிகளை வளமுள் ளனவாகவும் அறிவியற் சொற்கள் நிறைந்தன வாகவும் ஆக்கவேண்டும். அவர்கள் மூலம் பாமர மக்கள் படிப்படியாக அறிவு பெறும்படி செய்ய வேண்டும்."

வட்டார மொழிகளை வளமுள்ளனவாகவும், வளர்ச்சியுற்றனவாகவும் செய்யவேண்டும் என்ற எண்ணம் லார்டு மெக்காலே காலத்தி லேயே இருந்துவந்திருக்கிறது என்பது மேற் கண்ட குறிப்பால் இனிது அறிந்துகொள்ள லாம்.

இந்தியைத் தமிழகத்தில்—திராவிடத்தில் திணிப்பது, வடநாட்டவர் தம் ஆதிக்கத்தை என்றென்றும் நிலைநாட்டிக்கொள்வதற்குப் பயன்படுமேயல்லாமல், தென்னாட்டவர்க்கு இம்மி அளவு நன்மையும் அதனால் ஏற்படப்

ஈருருளித் (சைகிள்) தொழிற்சாலை

எந்த நாட்டில் பொருளுற்பத்தித் தொழிற்சாலைகள் மிகவாக விளங்குகின்றனவோ, அந்த நாடுதான் பொருளாதார வளத்தில் செழித்தோங்கி நிற்கும் என்பதை முன்பே விளக்கியுள்ளோம். தொழிற்சாலைகள் பெருகப்பெருக வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கும், வாழ்க்கைத்தரம் பெருகும், வாணிகம் செழிக்கும், வளம் ஓங்கும். இந்த நிலையை வளர்த்துக் கொண்டு வருவதிலே வடநாடு மிகக் கண்ணுங் கருத்துமாக இருந்துவருகிறது. வடநாட்டு வணிகக் கோமான்களுக்குப் பெருந்துணையாக இந்தியப் பேரரசு இருந்துவருகிறது. தென்னாட்டினர் முயற்சி எடுப்பதற்கான வலிவைப் பெறவில்லை; அப்படியே சிறிதளவு முயற்சி எடுத்தாலும் அதனை உடனே அழித்து ஒழிக்க வடநாட்டு முதலாளிகள் கழுகுபோல் வட்டமிட்டவண்ணம் இருந்து வருகின்றனர்; இந்தியப் பேரரசினரோ வடநாட்டுக்குச் சலுகைகாட்டவேண்டும் என்ற வஞ்சக எண்ணத்தில், ஆதரவுதர அறவே மறுக்கின்றனர்.

எடுத்துக்காட்டாக ஈருருளித் (சைக்கிள்) தொழிற்சாலைகளை எடுத்துக்கொண்டால், இந்தியாவில் சுமார் எட்டு தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவற்றில் ஏழு வடநாட்டிலும் ஒன்று தென்னாட்டிலும் இருந்து ஈருருளிகளை உற்பத்தி செய்கின்றன.

பெருந் தொழிற்சாலைகள் ஏழு வடநாட்டில் இருக்கின்றன என்றால், எவ்வளவு மிகவான தொழிலாளர்களுக்கு வேலையும், எவ்வளவு மிகவான வருவாயும் அங்குள்ளவர்களுக்குக் கிடைக்கக்கூடும் என்பதை ஊகித்தறிந்து கொள்ளலாம்.

தென்னாட்டில் உள்ள தொழிற்சாலை

1. டியூப் இன்வெசுட்டுமெண்ட் சைகிள்சு ஆப் இந்தியா, அம்பத்தூர்—சென்னை.

வடநாட்டிலுள்ள தொழிற்சாலைகள்

1. இந்தியா சைகிள் மானுபாக்ச்சரிங் கம்பெனி, கல்கத்தா.
2. இந்துசுத்தான் பைசைகிள் மானுபாச்சரிங் அண்டு இண்டசுட்டிரியல் கார்பொரேசன், பாட்னா.
3. இந்து சைக்கிள் லிமிடெட், பம்பாய்.
4. சென்-ரலே லிமிடெட், ஆரன்சால்—கல்கத்தா,
5. அட்லாசு சைக்கிள்சு இண்டசுட்டிரீசு லிமிடெட், சோனபேட்—டில்லி.
6. வேர்வெல் சைகிள் (இந்தியா) லிமிடெட், பாரிடாபாட்—டில்லி.
7. ரோட் மாசுட்டர் இண்டசுட்டிரீசு ஆப் இந்தியா, இராசபெனைவா—பெப்சு.

வடநாடு எப்படி வளர்கிறது என்பதற்கு இந்தத் தொழிற்சாலைகளின் விபரமும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

போவதில்லை; மாறாக வடநாட்டிற்குத் தென்னாட்டவர் அடிமைப்படவேண்டிய அவசியம் ஏற்படும்.

தமிழர்க்கு — திராவிடர்க்குத் தேவையானது ஆங்கிலமா? இந்தியா? என்றால், ஆங்கிலந்தான் என்று அழுத்தந்திருத்தமாக ஆயிரந்தடவை வேண்டுமானாலும் கூறலாம்; இந்தி அறவே அவசியமில்லை என்று அந்த அளவுக்குப் பகரலாம்!

வினாவும் விளக்கமும்

வினா : திராவிட முன்னேற்றக் கழகம் தனித் தமிழ் நாட்டுப் பிரிவினைக்கு மட்டும் முயன்று வெற்றி யடையாமல், அவ்வளவு எளிதில் ஒத்துவராத மற்ற கேரள, கருநாடக, ஆந்திர நாடுகளும் சேர்ந்த திராவிடத்துக்குப் பாடுபட்டுக் காலத்தையும் ஆற்றலையும் ஏன் வறிதே வீணாகக் கழித்துக் கொண்டிருக்கவேண்டும்?

விளக்கம் : தமிழகம்-ஆந்திரம்-கருநாடகம்-கேர ளம் ஆகிய நான்கும், மொழிவழியும் தேவை யான உரிமைகள் வழியும் தனித்தனி மாநிலங் களாகப்பிரிந்து, பொதுப்படையான குறைந்த அளவுத் திட்ட அடிப்படையில் ஒன்றுபட்ட திராவிடக் கூட்டாட்சியாக மலரும், ஒரு அரசி யல் அமைப்பைத்தான், திராவிட முன்னேற் றக்கழகம் வலியுறுத்தி வருகிறது.

துளுமொழி பேசப்படும் பகுதி மிகச் சிறிய தாக இருப்பதாலும், கருநாடகப் பகுதியோடு பெரும்வகையில் ஒத்துவரக்கூடியதாக விளங் குவதாலும் அது தனியே ஒரு பகுதியாகப் பிரித்துக் கணக்கிடப்படாமல், கருநாடகப் பகுதியோடு சேர்த்தே கணக்கிடப்படுகிறது.

திராவிடக் கூட்டாட்சி மலரவேண்டும் என்று நாம் கூறுவதற்குக் காரணம், தமிழகம் தனி நாடாக இலங்குவதற்கான தகுதி படைத் தது அல்ல என்பது அல்ல, திராவிடப் பகுதி கள் நான்கும், குறைந்த அளவுத் திட்ட அடிப் படையில் ஒரு கூட்டாட்சி நாடாக அமைவ தற்கு ஏற்ற சிலபல பொதுமைப்பண்புகளைக் கொண்டிருக்கின்றன என்பதேயாகும்.

எந்த எந்த காரணங்களுக்காகத் தமிழகம் வடநாட்டுத் தொடர்பினின்றும் விடுபட்டுத் தனி நாடாக விளங்கவேண்டும் என்று கூறு கிறோமோ, அதே காரணங்கள், ஆந்திரம்— கருநாடகம்—கேரளம் ஆகிய பகுதிகளுக்கும் பொருந்திவருகின்றன. வடநாட்டு அரசியல் ஆதிக்கம், வடநாட்டுப் பொருளாதார ஆதிக் கம், வடநாட்டு வணிக ஆதிக்கம், வடநாட்டு இந்திமொழி ஆதிக்கம் போன்ற பல்வேறு ஆதிக்கங்கள் தமிழகத்தை எப்படி வாட்டி வதைக்கின்றனவோ, அப்படியேதான் மற்ற மூன்று பகுதிகளையும் வாட்டி வதைக்கின்றன. இந்த ஆதிக்கப் பிடிப்புகளிலிருந்து விடுபட வேண்டும் என்ற உணர்வு தமிழகத்தில் எப்படிச்சிறிதுசிறிதாக முகிழ்க்கின்றதோ அப் படியே பிற திராவிடப் பகுதிகளிலும் சிறிது சிறிதாக அவ்வுணர்வு முகிழ்க்கும் என்று எண்ணுவதற்கு இடமிருக்கிறது.

மற்ற திராவிடப் பகுதிகள் மூன்றும் தமிழ கத்தை அடுத்து விளங்குவதாலும், நான்கும் ஒரு வரலாற்று இனத்தைச் சேர்ந்தவைகளாக இருப்பதாலும், உறவுகொள்ளவேண்டிய பிரச்சினைகள் பலப்பல இருப்பதாலும் நான் கும் குறைந்த அளவுத் திட்ட அடிப்படையில் ஒரு கூட்டாட்சியாக அமைவது நலம் பயக்கும் என்று தி. மு. கழகம் கருதுகிறது; அந்த எண்ணத்தை வெளியிடுகிறது; நாளடைவில் தன் எண்ணத்திற்கு ஆதரவு கிட்டும் என்று எதிர்பார்க்கிறது.

நாட்டுப் பிரிவினைக் கொள்கையை அறவே ஏற்றுக்கொள்ள மறுத்த தமிழகம், சில ஆண்டுக் கொள்கை விளக்கத்திற்குப் பிறகு, சிறிது சிறிதாக ஏற்றுக்கொள்ள இசைந் திருக்கிறது என்பதற்கான அறிகுறிகள் தென்படுவதைப்போல், மற்ற திராவிடப் பகுதிகளும் தீவிரக் கொள்கை விளக்கத்திற் குப்பிறகு ஏற்றுக்கொள்ள முன்வரும் என்ற உறுதிப்பாடு நமக்கு இருக்கிறது. நம்பிக்கை இழக்கும்படியான அளவுக்கு நிலைமைகள் ஏற் படாததினால் இன்னும் நமக்கு உறுதிப்பாடு இருந்துவருகிறது. சென்ற சிலநாட்களாக ஆந்திர—கருநாடக—கேரள அரசியல் தலை வர்கள் அங்குமிங்குமாக வடநாட்டு ஆதிக் கத்தை வெறுத்துப் பேசும் பேச்சுக்கள் சில வற்றைக் கவனித்தால், பிரிவினைக் கொள் கையை ஆதரிக்கும் நிலைமை அங்கெல்லாம் விரைவில் ஏற்படக்கூடும் என்று அறுதியிட இடமிருக்கிறது. அங்கெல்லாம் போதுமான அளவுக்கு ஆதரவு இதுகாறும் திரளாததற் குக் காரணம் கொள்கை குறைபாடுடையது

என்பதல்ல, கொள்கை விளக்கம் போதுமான அளவுக்குச் செய்யாத குறைபாடேயாகும்.

அறிஞர் அண்ணா அவர்கள் முன்பு ஒரு முறை குறிப்பிட்டதுபோல, ஒரு அணாவை மாற்றிக் காலணாவை எடுத்துக்கொள்வது என்பது எப்படி உறுதியும் எளிதும் ஆன ஒரு செயலோ, அப்படியேதான் திராவிடம் முழுதும் கிட்டாது என்னும்போது, திராவிடத்தின் ஒரு பகுதியாக விளங்கும் தமிழகத்தைத் தனித்தமிழ்நாடாக உருவாக்கிக்கொள்வதும் ஆகும். திராவிடம் முழுவதும் கிட்டாது என்று நம்பிக்கை இழக்கும்படியான நிலைமை இன்னமும் ஏற்பட்டுவிடவில்லை. ஆரம்ப முயற்சியே போதுமான அளவுக்கு எடுக்காதபோது, நம்பிக்கை யிழந்துவிடும் முடிவினை அவ்வளவு அவசரப்பட்டு இப்பொழுதே ஏன் எடுக்கவேண்டும்?

திராவிடக் கூட்டாட்சிபற்றிய வித்துக்களை இப்பொழுது தூவிவருகிறோம். அவை அண்மையில் பலனளிக்காவிட்டாலும், சிறிதுகாலங் கழித்து அது பலனளிக்காமல் போகாது என்ற உறுதிப்பாடு இன்னமும் இருந்து கொண்டுதானிருக்கிறது.

அகில இந்தியாவின் ஒன்றுபட்ட வாழ்வு அதிகமாக நீடித்திருக்கும் என்றால், அது பண்டித நேருவின் வாழ்நாள் வரையிலுந்தான் என்று கூறலாம். பண்டித நேருவின் காலத்திற்குப் பிறகு மொழிவழி வட்டார உணர்ச்சி இப்பொழுதிருப்பதைக்காட்டிலும் நூற்றுக்கணக்கான மடங்கு மிகவாகத் தலை தூக்கி நிற்கும். அப்பொழுது அந்தந்த வட்டாரத்துத் தலைவர்கள் தங்கள் தங்கள் வட்டாரத்தை முன்வைத்து எண்ண முற்படுவார்களேயல்லாமல், அகில இந்தியாவை முன் வைத்து எண்ணமாட்டார்கள். தங்கள் தங்கள் வட்டாரம் தங்கள் தங்கள் மக்களுக்கே முழு உரிமையும் வாய்ந்ததாக இருக்கவேண்டும் என்ற உரிமைவேட்கை எழச்செய்யும். அப்பொழுது தமிழகம்—ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகிய நான்கும் தனித்தனி நாடுகளாகப் பிரிந்தாலும் நாம் வியப்படைவதற்கில்லை. அப்படிப் பிரிந்துபோகும் திராவிடப் பகுதிகள் நான்கும், சிறிது காலத்திற்குள் குறைந்த அளவுத் திட்ட அடிப்படையில் ஒரு கூட்டாட்சி அமைப்பின் கீழ் இயங்குவது எளிது; நடக்கக்கூடியது; அந்த அளவுக்கு இந்த நான்கு பகுதிகளிடையே மட்டும் பொதுமைப்பண்புகளும் பொதுமைப் பிரச்சினைகளும் உண்டு. திராவிடக் கூட்டாட்சி பற்றி நாம் இப்பொழுது தூவிடும் வித்துக்கள் அப்படிப் பட்ட நிலைமைகளை உருவாக்கப்பெரிதும் பயன்படுவனவாகும்.

திராவிடப் பகுதிகள் நான்கும் வடநாட்டுத் தொடர்பினின்றும் விடுபட்டு, தனிக் கூட்டாட்சி அமைப்பின் கீழ் இயங்குவது நடைபெறக்கூடிய ஒன்றேயாகும் என்று நாம் உறுதிகொள்வதற்குக் காரணம் உண்டு. 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்ற முழக்கத்தைத் தான் நாம் முதன்முதலில் கிளப்பினோம். இந்த முழக்கம் 1938-ல் கட்டாய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாக ஏற்பட்ட முழக்கமாகும். 1938-ல் சென்னைக் கடற்கரையில் கூடிய மாபெரும் பொதுக்கூட்டத்தில் பெரியார் இராமசாமி, மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார் ஆகிய மூவரும் சேர்ந்து உருவாக்கிய முடிவுதான் "தமிழ்நாடு தமிழர்க்கே" என்பதாகும். 1938-இலிருந்து 1940 வரையில் அந்த முழக்கந்தான் தமிழகமெங்கணும் எழுப்பப்பட்டது. 1940-இல் திருவாரூரில் கூடிய நீதிக்கட்சி மாநாட்டில் கலந்துகொண்ட ஆந்திர—கருநாடக—கேரளப் பிரதிநிதிகள், தமிழர்கள் எந்த எந்த காரணங்களுக்காகத் தமிழகத்தைத் தனி நாடாகப் பிரிக்க வேண்டும் என்று கோருகிறார்களோ, அதே காரணங்கள் தங்கள் தங்கள் பகுதிகளுக்கும் பொருந்திவருவதால், திராவிடப் பகுதிகள் நான்கும் கூட்டாகச் சேர்ந்து வடநாட்டுத் தொடர்பினின்றும் பிரிந்து, கூட்டாக ஆட்சி அமைத்துக்கொள்ளலாம் என்றும், நான்கும் ஓரின அடிப்படையில் வளர்ந்த பகுதிகளாகையால், நான்கும் தேவையான அளவுள்ள ஒரு கூட்டாட்சி அமைப்பின்கீழ் அமைவது பொருத்தமாகும் என்றும் வற்புறுத்திக் கூறியதன்பேரில், 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்ற முழக்கம் 'திராவிடநாடு திராவிடர்க்கே' என்று திருத்தப்பட்டது. அது முதற்கொண்டு 'திராவிடநாடு திராவிடர்க்கே' என்பது இலட்சிய முழக்கமாக இருந்துவருகிறது.

திராவிடப் பகுதிகள் நான்கும் மொழிவழி மாநிலப்பிரிவினை பற்றிய பிரச்சினைகளில் தங்கள் கவனத்தைத் திருப்பியிருப்பதால், நாட்டுப் பிரிவினை முழக்கம் அவைகளின் செவிகளில் அவ்வளவு தெளிவாக விழவில்லை. மொழிவழி எல்லைப் பிரச்சினைகளில் தெளிவு ஏற்பட்ட பிறகு, திராவிட நாட்டுப் பிரிவினை முழக்கம் எங்கணும் எழுப்ப வழி பிறக்கும்.

நாட்டுப் பிரிவினைக் கொள்கைக்கு மற்ற மூன்று பகுதிகளும் ஒத்துவாரா என்று முடிவு செய்யும் படியான அளவுக்குக் காலமும், நிலை

களும் ஏற்பட்டுவிடவில்லை; இன்னும் ன்றுபார்க்கலாம்; முயற்சி திருவினை க்கும்; நான்கு பகுதிகளும் சேர்ந்து விடு ம் முயற்சி நாட்டுப் பிரிவினைத் திட்டத் ற்கு வலிவும், ஆக்கமும். ஊக்கமும் தருவ கும். எனவே திராவிடக் கூட்டாட்சி ற்சியைக் கைவிட்டுவிடவேண்டிய அவசி இப்பொழுது எழவில்லை.

திராவிடக் கூட்டாட்சி முயற்சி தனித் தமிழ் ட்டுப் பிரிவினை முயற்சிக்கு எந்தவகையி ம் ஊறு செய்வதல்ல; எந்த நொடியிலும் ழ்நாட்டுப் பிரிவினை முயற்சியில் ஈடுபட யும், வகையுமுண்டு, ஒரு அணுவில் கால வைப் பெறுவதுபோல. எனவே திராவிடக் ட்டாட்சி முயற்சி அண்மையிலேயோ அல் து சேய்மையிலேயோ பலனளிக்கக்கூடிய ற்சிதான். அதற்காகச் செலவழிக்கப்படும் ற்றலும், காலமும் வீண் என்று எண்ண ண்டியதில்லை!

❖ ❖ ❖

று: கோயில்களை இடிப்பதால், கடவுட்சிலைகளை உடைப்பதால் சமூகம் சீர்திருந்திவிடுமா?

விளக்கம்: இத்தகைய கேள்வி கேட்போர் ாவிட முன்னேற்றக் கழகத்தையும் சரியா தெரிந்துகொள்ளவில்லை, அது கூறிடும் கச் சீர்திருத்தக் கருத்துக்களையும் சரியா புரிந்துகொள்ளவில்லை என்று தெரிகிறது. லையாயின் மேற்கண்ட கேள்வியைக் கேட் தம் அறியாமையை வெளிப்படுத்தி க்கமாட்டார்கள்.

கோயில்களை இடிக்கவேண்டும் என்றோ, வுட்சிலைகளை உடைக்கவேண்டும் என்றோ, ப்படியெல்லாம் செய்வதுதான் சீர்திருத்தம் ன்றோ திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு ளும் கூறியதில்லை. கோயில்களைப் பொறுத் ம், கடவுட் சிலைகளைப் பொறுத்தும் மக்கள் ாண்டுள்ள பயனற்ற மூடநம்பிக்கைகளைப் ாக்கி அவர்களைப் பகுத்தறிவு நெறியின ஆக்கவேண்டும் என்ற சீர்திருத்தப்பணி தான் கழகம் என்றென்றும் ஈடுபட்டிருக் து.

ழகம் கோயில்களை இடிக்கச் சொல்லவில்லை; அவை க் கண்காட்சி—பொருட்காட்சிச்சாலைகளாகவும், து அறநிலையங்களாகவும், கலைக்கூடங்களாகவும் ப்பிக்க வேண்டும் என்றுதான் சொல்லுகிறது.

கழகம் கடவுட்சிலைகளை உடைத்தெறியச் சொல்லவில்லை; அவைகளெல்லாம் கண்காட்சிப்பொருள்களாக வைக்கப்பட்டு அழகு பார்க்கப்படவேண்டும் என்றுதான் சொல்லுகிறது.

இந்தச் செயல்களை வன்முறை (பலாத்காரம்) மூலம் செய்ய கழகம் ஒருநாளும் முற்படாது. நாட்டின் பெரும்பகுதி மக்களின் எண்ணங்களைத் தன்வயப்படுத்தி, பெரும்பாலான மக்களின் விருப்பத்தின்பேரில், பெரும்பாலான மக்களின் துணைகொண்டு அமைதியான முறையிலேயே அந்தப் பணிகளை நடைமுறைக்குக் கொண்டுவர கழகம் திட்டமிட்டு வேலை செய்துவருகிறது. எனவேதான் சீர்திருத்தக் கருத்துக்களை மக்கள் உள்ளங்களில் தூவிடும் பணியினை எப்பொழுதும் எங்கும் அமைதியான முறையில் செயல்படுத்தி வருகிறது.

கோயில்கள் — சிலைகள் ஆகியவற்றிலே பொதிந்து கிடக்கும் கலையழகை அல்ல நாம் புறக்கணிப்பது. அவற்றைப் பொறுத்து மக்கள் உள்ளத்தில் ஏற்பட்டிருக்கும் கருத்துக்களைத்தான் நாம் புறக்கணிக்கிறோம். மக்கள் தங்களுடைய குறைகளையும், நலிவுகளையும் போக்கிக்கொள்ள கோயில்களையும்—கடவுட் சிலைகளையும் மாமருந்தென நம்பிக் கிடக்கும் நம்பிக்கையைத்தான் நாம் மூடநம்பிக்கை என்று கூறுகிறோம். இறந்தகால நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, மக்களுடைய குறைபாடுகள்—நலிவுகள் ஆகியவற்றிற்கும் கோயில்கள்—கடவுட்சிலைகள் ஆகியவற்றிற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதுதான் திட்டவட்டமாகத் தெளிவாகிறது. அறிவு வழி நின்று ஆராய்ந்து செய்யப்படும் செயல்கள்தாம் மக்களின் குறைகளையும் நலிவுகளையும் போக்கக்கூடியனவாக இருக்கின்றனவேயல்லாமல், பக்தி வழி நின்று செய்யப்படும் கோவில்—கடவுள் வழிபாடுகள் அல்ல என்பது தெளிவுறப் புலப்படுவதால்தான், நாம் கோவில்—கடவுள் வழிபாடுகள் மூடநம்பிக்கையின்பாற்பட்டவை என்று ஒதுக்கிவைக்கிறோம். எனவேதான் மக்கள் கடைபிடிக்கவேண்டியது ஆராய்ந்தறியப்படும் பகுத்தறிவு நெறியேயொழிய, நம்பிச் செய்யப்படும் பக்தி நெறி அல்ல என்று நாம் வற்புறுத்திக் கூறிவருகிறோம். கோவில்களையும்—கடவுள்களையும் வழிபடுவதோ அல்லது உடைப்பதோ அல்ல நமது நோக்கம்; அவைகளைப் பயன்படுத்துவதே நமது நோக்கம்!

பெரும்பெருங் கோயில்களிலுள்ள கடவுட்

சிலைகளையெல்லாம் ஒரு பெரிய மண்டபத்திற்குக் கொண்டுவந்து அங்கு வரிசையாகத் தனித்தனி மேடைகளில் நிலைநிறுத்தவேண்டும். அந்தச் சிலைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கற்பனைப் பெயர்களை அவற்றிற்கு மேலே எழுதிவைக்க வேண்டும். அந்தச் சிலைகள் உருவாக்கப்பட்டதன் வரலாறுகள் பற்றியும், அவைபற்றி எழுதிவைக்கப்பட்டுள்ள கற்பனைக் கதைகள் பற்றியும் குறிப்புகள் எழுதிவைக்கலாம். வேடிக்கைப் பார்க்க வருபவர்கள் வியப்புணர்ச்சிகொண்டு மகிழ்வதற்கு அவை வாய்ப்பு அளிப்பனவாக இருக்கும்.

இப்பொழுது கோயில்களிலுள்ள கற்சிலைகள் ஒவ்வொன்றிலுள்ள அழுக்குகளைச் சுரண்டி எடுத்தால் இரண்டு மூன்று பவுண்டுகளுக்குமேல் எடுக்கலாம். பத்து இருபது பவுண்டு அழுக்குகள் சேர்ந்துள்ள கடவுட்சிலைகளும் இருக்கின்றன. அவற்றையெல்லாம் தூய்மைப்படுத்தி, சிலைகளிலுள்ள கலையழகு நன்கு தெரியும்படி பக்குவப்படுத்தி, அவற்றின் சுற்றுச் சூழ்நிலைகளை அழகுபடுத்திக் கண்காட்சிப் பொருள்களாக நிலைநாட்ட வேண்டும். இருட்குகைகளாக இருக்கும் மண்டபங்களையும், அறைகளையும் கதிரவன் ஒளியும் காற்றும் நன்கு வீசும் இடங்களாக மாற்றி நூலகங்கள், படிப்பகங்கள், இசையரங்குகள், நாடக அரங்குகள், பொதுக்கூட்ட மன்றங்கள், விளையாட்டுக்கூடங்கள், உடற்பயிற்சிக் களங்கள் போன்ற பொதுமக்களுக்குப் பயன்படும் பல்வேறு அமைப்புகளை ஏற்படுத்தவேண்டும். கல்லினால், செம்பினால், பித்தளையால், வெண்கலத்தால், வெள்ளியால், பொன்னால், இரும்பால், மரத்தால் செய்யப்பட்ட கடவுட்சிலைகள், வாகனங்கள், பல்லக்குகள், சப்பரங்கள், தேர்கள், எடுபிடிகள்; தூபகலங்கள், வெண்சாமரைகள், அணிகலன்கள், ஆடைகள் போன்ற பல்வேறு பொருள்களையும் கண்காட்சிப் பொருள்களாக வைக்க வேண்டும். இவையெல்லாவற்றையும் காண்பது, வருங்கால மக்களுக்குப் பொழுதுபோக்காகப் பெரிதும் பயன்படும்.

நடமாடும் ஆண்டவனின் சிலையைப் பூங்காவின் நடுவிலே வைத்து, அதன் கலையழகைக் கண்டு மகிழ்வதை நாம் குறைகூறவில்லை. அந்தச் சிலைக்குப் பாலும், பழமும், படையலும் படைத்து, வரங்கேட்டு நிற்கும் மூடநம்பிக்கையைத்தான் நாம் குறைகூறுகிறோம். அது அவசியமில்லை என்கிறோம்; பொருளற்றது என்று புகல்கிறோம்.

கடவுட்சிலைகளைக் கண்காட்சிப் பொருள்களாக மாற்றவேண்டும் என்று நாம் சொல்லு[illegible] கருத்து நாளடைவில் பொதுமக்களால் நிறை[illegible] வேற்றப்பட்டே தீரும் என்பதற்கான அ[illegible] குறிகள் இப்பொழுதே தோன்ற ஆரம்பித்து விட்டன. ஒருகாலத்தில் தஞ்சை மாவட்ட[illegible] தின் பல கோயில் மக்களால் வணங்கப்பட்[illegible] வந்த பல கடவுட்சிலைகள் இப்பொழுது தஞ்சை அரண்மனையிலுள்ள கலைக்கூடத்தில் கண்காட்சிப் பொருள்களாகக் காட்சியளி[illegible]கின்றன. அந்தக் கலைக்கூடம் நாடக—இசையரங்குகளாகவும் பயன்படுகின்றன. இந்[illegible] ஏற்பாட்டை முன்னின்று செய்தவர் தஞ்சை மாவட்டக் கலெக்டராக இருந்த தோழர் டி[illegible] கே. பழனியப்பன் ஆவார். இதனைத் திறந்து வைத்தவர் சென்னை முதல் அமைச்சரா[illegible] இருந்த தோழர் இராசகோபாலாச்சாரியா[illegible] ஆவார். அது வழிபாடு நடைபெறும் கோயி[illegible]லாக இல்லை; கண்டு மகிழும் கலைக்கூடமாகத்[illegible] தான் காட்சியளிக்கிறது. இப்படிப்பட்ட கலை[illegible] கூடங்களாக எல்லாக் கோயில்களும் மா[illegible] வேண்டும் என்பதுதான் நமது விருப்பம்.

கழகம் கோயில்களையும் — கடவுட்சிலைக[illegible] யும் உடைக்காது; அவைகளைப் பகுத்தறி[illegible] நெறிக்கேற்றபடி பயன்படுத்தும்!

வெளிவந்துவிட்டது ! முதல் வெளியீடு !

திருமதி சத்தியவாணி முத்து

எழுதிய

எரிக்கப்பட்டாள்

எனும் உலகப் புகழ்வாய்ந்த பெண் மணியின் உண்மை வரலாற்று நூல்

விலை ரூ. 1 0 0

கழிவு 25.|· தபால் செலவு இனாம்

மதி மன்றம்

38, பிடாரியார்கோயில் தெரு

சென்னை-1.

இடுப்புப்பட்டி கால்சட்டை

இது சாதாரணக் கால்சட்டையிலிருந்து சில ...றுதலுக்கு இடம் தந்து இன்று இடுப்புப் ...டி கால்சட்டை என வழங்குவதாகும். ...டுப்புப்பட்டி $1\frac{1}{2}$ அங்குலம் முதல் இரண்டு ...ங்குலம் வரை அணிபவரின் விருப்பத்திற்கு ...ப அமைக்கலாம்.



அளவுகள்

நெடுங் கால் நீளம்	42	அங்குலம்
அடிக்கால் நீளம்	30	,,
இடுப்புச் சுற்றளவு	30	,,
புட்டம் சுற்றளவு	36	,,
முழங்கால் சுற்றளவு	21	,,
முன்கால் (பாட்டம்) சுற்றளவு	18	,,
மூல அளவு (ஸ்கேல்)	18	,,

படம்—1

1-ல் இருந்து 0 வரை $40\frac{3}{4}$ அங்.
(முழுநீளம் $+\frac{1}{4}$ அங்குலம் தையலுக்குச் சேர்த்து அதில் இடுப்புப்பட்டி அகலம் $1\frac{1}{2}$ அங். குறைவு.)

2-ல் இருந்து 1 வரை $30\frac{1}{4}$ அங்.
(அடிக்கால் அளவு $+\frac{1}{4}$ அங்.)

3-ல் இருந்து 4 வரை 13 அங்.
($\frac{1}{2}$ அடிக்கால் அளவில் 2 அங். குறைவு)

4-ல் இருந்து 5 வரை 6 அங்.
(1/3 ஸ்கேல்)

4-ல் இருந்து 2 வரை 1 அங்

5-ல் இருந்து 6 வரை $3\frac{1}{4}$,,
(1/6 ஸ்கேல் $+\frac{1}{4}$ அங்,)

6-ல் இருந்து 7 வரை 3 ,,
(1/6 ஸ்கேல்)

7-ல் இருந்து C வரை $\frac{1}{4}$,,
(குறி ஒதுக்கம்)

8-ல் இருந்து 7 வரை $1\frac{1}{2}$,,

B-ல் இருந்து 6 வரை $1\frac{1}{2}$ அங்.
(7, 6-க்கும் உள்ள அளவில் பாதி)

(தொடரும்)

தையற்கலை வல்லுநர்

தோழர் கே. பி. சுந்தரம்

பம்பாய் பயணம்

தோழர் கே. பி. சுந்தரம் அவர்கள் தையற்கலை பற்றிய நுணுக்கங்களை அறிந்துகொள்ளவும், கமர்ஷியல் தையற்கலை கல்லூரியில் பயிற்சி யளிக்கப்படும் முறைகளைக் கண்டறியவும் 18-6-55 தேதி அன்று சென்னையிலிருந்து புறப்பட்டுச் செல்கிறார் அங்கு இரண்டுவார காலம் தங்கி வேறுபல முக்கிய நகர்களுக்கும் சென்று திரும்புவார்.

Regd. No. M [illegible]

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

"மன்றம்"

மலர் - 2 1953 - 54
மலர் - 3 1954 - 55

24 இதழ்கள் கொண்ட பைண்ட் செய்யப்பட்ட மலர்கள்
ஒவ்வொன்றும்

விலை ரூ. 8 0 0

(தபாற்செலவு உட்பட)

விற்பனைக் கழிவு இல்லை. முன்பணம் அனுப்புதல் வேண்டும்.
வி. பி. கிடையாது.

(மலேயா தோழர்கள் ஒரு புத்தகத்திற்கு ரூ. 10 வீதம் அனுப்பவேண்டும்.)

விபரங்கட்கு :

"மன்றம்"
26, நைனியப்பன் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.,
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS.